உ
வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } பிலவ - ஆவணி 10—9—61 { இதழ் 10

உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

தெய்வத் தமிழ் மாட்சி

" சமுதாயம் சீரிய முறையில் நடைபெறுவதற்கான சாதனமே சமயம் ; தமிழின் தனிச்சிறப்பு தெய்வீகமானது ; அதை மறக்கவோ உணராமல் இருக்கவோ முடியாது. திருக்கோயில் இல்லையென்றால் நாம் போற்றிக் கொண்டாடும் தமிழ் இல்லை. பொருள்மட்டும் இருந்தால் வாழ்க்கையில் இன்பமே இல்லை ; குறைவற்ற இன்பகரமான வாழ்க்கைக்குத் தெய்வீகப் பற்று அவசியம் தேவை."

இந்த நன்மொழிகளை 20—8—61 அன்று சென்னைநகர விழாவொன்றில் விரிவுரையாற்றிப் பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டை வெளியிட்ட சென்னைமாநில அறநிலையப்

பாதுகாப்பு அமைச்சர், நல்லறங்காவலர், கனம். உயர்திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள் வெளியிட்டார்கள். ஆழ்ந்து சிந்தித்துச் சீர்தூக்கி உரைக்கும் அமைச்சரவர்களின் இக்கருத்துக்கள் தமிழ் மக்கள் உணரவேண்டிய உறுதி உடையவை என்று கூற விரும்புகிறோம். சமுதாயம் சமயத்தின் இன்றியமையாமையை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப் புரிந்துகொள்ளாதவரையில் சமுதாய முன்னேற்றம் சமுதாய வளர்ச்சி என்றெல்லாம் பேசுவது முயற்கொம்பே. ஒரு சமுதாயம் உள்ளத்தால் திருந்தி உயர் குறிக்கோளை எய்தச் சமயம் உறுதுணையாகிறது. எப்படி ? நம்நாட்டின் கடந்தகால வரலாற்றை உற்றுநோக்குங்கள் ; சைவமும் வைணவமும் இன்றேல் நம் பழந்தமிழ்ச் சமுதாயம் ஏது ? பழந்தமிழ் இலக்கியம் ஏது ? பழந்தமிழ்ப் பெருமக்களின் நல்வாழ்வு ஏது ?

தமிழ்ச் சமுதாயம் சமயத்தால் - ஆத்மீக வளர்ச்சியால் - அருளியல் பெருநோக்கால் வளர்ந்திருக்கிறது. தொட்ட செயல் எல்லாவற்றிலும் இறையருள் முன்னிற்க வெற்றி கண்ட வீரபரம்பரை தமிழ்ப்பரம்பரை. இது வெறும் புகழ்ச்சியன்று ; உண்மையுரை.

தலைச்சங்க, இடைச்சங்கக் கடைச்சங்க வரலாறுகளாக நாம் அறிவன அனைத்தும் தமிழின் தெய்விகத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெறிந்த குமரவேளும், தமிழாராய்ந்து சிறப்பித்த செய்தியை இறையனார் அகப்பொருள் எடுத்துக் கூறுகின்றது.

" சங்கத்தமிழின் தலைமைப்புலவா " என்று பிள்ளைத் தமிழில் முருகனைப் பணிகின்றார் பெருஞானத்துறவியாராகிய குமரகுருபர அடிகள்.

" தண்டமிழைக் கூட்டாக உண்டு மகிழ அல்லவோ நீ சௌந்தரமாறனாக, அன்னை தடாதகையாக, முருகன் உக்கிர குமாரராக அவதரித்தது " என்று மதுரைக் கலம்பகத்திலே மனங்கசிந்து பாடுகின்றார் அடிகள்.

12 SEP 1961

அவ்வாறு தேய்வீகச் சிறப்புடையதாய் - வரலாற்றேல் லேக்கு அப்பாற்பட்டதாய் இலங்குகின்றது தமிழ். "ஞாலம் அளந்த மேன்மைத் "தேய்வத் தமிழ்" என்று சிறப்பிக்கிறுர் சேக்கிழார்பெருமான்.

தமிழின் தேய்விகச் சிறப்புக்கு இவற்றினும் வேறு சான்று வேண்டுமோ? தமிழ் நலம் கனிந்த சான்றோர் அருளுரைகளால் சிறந்த தமிழ் பக்திவேள்ளத்தில் பழுத்தது; தழைத்தது. தமிழில் உள்ள தோத்திரப்பாடல்கள் உலக மாந்தர்கள் உள்ளங்களை உருக்குகின்றன. சமயம் பரப்ப வந்த பிற சான்றோரேல்லோரையும் தன்பால் ஈர்த்துத் தடுதே தாட்கோண்டது தண்டமிழ் எனக் காண்கின்றோம்.

இத்தகு தமிழைப் பைந்தமிழ் என்றும் சேந்தமிழ் என்றும் சுவைக்கும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலேக்குருமணியவர் களின் திருவுள்ளம். அறிவுச்சேல்வர்கள் பலரைச் சமய உல கிற்கு - தமிழ் உலகிற்கு வழங்கியுள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குரு மணியவர்களின் திருவுள்ளம் 22—8—61 ஆவணிமூலத் தன்று நேல்லே இந்துக்கல்லூரித் தமிழ்த்துறைத்தலேவர் திரு. அருணசலக் கவுண்டர் அவர்களேப் "பைந்தமிழ்ச்சேம்மல்" ஆக்கியுள்ளது. "தேய்வநம்பிக்கை நிறைந்ததாய் - சமய நேறிக்கு மாறுபாடில்லாததாய் - தேய்வத் தமிழ்நலம் கனிந் ததாய் - சேம்மல் உள்ளம் சான்ற சேக்கிழார், மணிவாசகர், சேரமான்பெருமாள் போன்ற நல்லோரை உடையதாய் இருப்பதே உண்மையான ஜனநாயக ஆட்சி" எனக் கூறிச் சேர சோழ பாண்டியர்காலச் சமயநேறி தமிழ்நேறிமாண்பை விளக்கி அருளாசி வழங்கினுர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமகா சந்நிதானமவர்கள். திரு. அமைச்சரவர்கள் தேய்வத்தமிழ் மாட்சியைச் சேன்னேயிலே உரைத்தார்கள்; ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமணியவர்கள் பைந்தமிழின் நலத்தைத் தருமையிலே தழைக்க வைத்தார்கள். தேய்வத் தமிழ்நலம் யாண்டும் பரவ இவ்விளக்கங்கள் துணேநிற்கும் என்பதே எமது நம்பிக்கை.

தருமையாதீன ஆவணிமூல (1961) விழாவில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

அருளிய

ஆசியுரை

"ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சோக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம்—பாலொளியாம்
மத்தனே கூடல் மதுராபுரி உமையாள்
அத்தனே ஆலவா யா."

அன்பர்களே !

இந்த ஆவணிமூலத் திருநாள் மிகச் சிறப்புடன் விளங்குகின்றது; செந்தமிழ்ச் சோக்கலிங்கப்பெருமான் திருவருளை உலகம் வாரி உண்ட திருநாள் ஆவணிமூலத் திருநாள். இந்த ஆவணிமூலத் திருநாளை மூவேந்தர் திருநாளாகக் கொண்டாடுவது இதன் சிறப்புக்கு மற்றொரு காரணமாகும். சமயநெறியை அரசியல் நெறியோடு இணைத்துப் பெருந்தொண்டாற்றியவர்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள். வில் கயல் புலி சின்னங்களையுடைய இவ்வீரமரபினர் அன்புநெறியில் சிறந்து விளங்கினார்கள். சமய, இலக்கியப் பெரும் பணிகளைப் புரிந்தார்கள். பெருந் திருக்கோயில்களைக் கட்டினார்கள். தாங்கள் வாழும் இடங்களைக் காட்டிலும், பெருமான் உறையும் இடங்கள் மிகப் பேரியனவாக-விண்ணையளாவியனவாக இருத்தல் வேண்டும் என்று எண்ணினார்கள். அந்த விரிந்த உள்ளமே இன்று நாம் திருக்கோயில்களைக் காணுதற்கும், வழிபடுதற்கும் துணையாகும்.

மூவேந்தர் பெருமையைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறியருளுகின்றார்கள். தவப்பெருந் தலைவராய் விளங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாயால் சிறப்பிக்கப்பெற்றவர்கள் என்றால் மூவேந்தர் பெருமையைப்பற்றி வேறு கூறவும் வேண்டுமோ ?

மதுரையிலிருந்து மூவேந்தர் புடைசூழச் சேன்று திருப்பரங்குன்றத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழிபடுகின்றார்கள். சங்க காலத்திலே மன்னர்கள் ஒன்றுபட்டுநிற்கும் உயர்கோலத்தைப்

புலவர்கள் 'இன்றே போல்க நும் புணர்ச்சி' என்று வாழ்த்தினர். ஏனெனில் மன்னன் எவ்வழியோ அவ்வழியே மன்னுயிர்கள் அல்லவா? மூவேந்தர் அருளாளர் அடிச்சுவட்டைப் பின்பற்றிநின்றதையே இங்குக் காண்கின்றோம்.

"அடிகேள் உமக்காட்செய அஞ்சுதும்
என்று அமரர்பெருமானை ஆரூரன்அஞ்சி
முடியால் உலகாண்ட மூவேந்தர்முன்னே
மொழிந்தாறு மோர்நான்கும் ஒரோன்றினையும்
படியாஇவை கற்றுவல்ல அடியார்
பரங்குன்ற மேய பரமனடிக்கே
குடியாகி வானோர்க்கும்ஓர் கோவுமாகிக்
குலவேந்தராய் விண்முழுதாள் பவரே."

திருப்பரங்குன்றத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் செல்லுங்கால், உடன்சென்ற மூவேந்தர்களும் கசிந்துருகி நின்று வழிபட்டனர். அங்கே அரசியல் சமயத்தின்வழி இயங்கிய அற்புதத்தையே காண்கின்றோம். 'முடியால் உலகாண்ட மூவேந்தர்' என்று சுந்தரர்பெருமான் பாடுகின்றார்கள். தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்தும், முதலையுண்ட பாலனை மீட்டும், பல அற்புதங்கள் நிகழ்த்திய அப்பெருமானார் திருவாயாலேயே இவ்வாறு பாராட்டக்கூடிய பெருவாய்ப்பு இம் மூவேந்தர்களுக்கு அன்றோ வாய்த்தது! இதனை எண்ணினால்தான் மூவேந்தர் தெய்வத்திறம் விளங்கும்.

"பரமர்திருப் பரங்குன்றிற் சென்று பார்த்திபரோடும்
புரமெரித்தார் கோயில்வலங் கொண்டுபுகுந்து உள்ளிறைஞ்சிச்
சிரமலிமாலைச் சடையார் திருவடிக்கீழ் ஆட்செய்யும்
அருமைநினைந் தஞ்சுதும்என்று ஆரூரர் பாடுவார்"

என்று சேக்கிழார் சுவாமிகள் இந்த நிகழ்ச்சியைப் பாடுகிறார்கள். இதுமட்டுமோ? திருவாலவாயிலே ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை மூவேந்தர் புடைசூழ வணங்கியெழுந்தார் சுந்தரர்பெருமான். சமயத்தலைவர் வழிநின்று வேந்தர் வாழ்ந்ததனாலன்றோ அரசியல் செழித்தது என்பதை இங்கும் காணலாம்.

" செம்பிய ஞருடன் செழியர் தாம் பணிந்து சேரருடன்
நம்பியுமுன் புறத்தணைய நண்ணிய பேரு வகையால்
உம்பர்பிரான் கோயிலினின்று உடன்கொடுபோய் இருவர்க்கும்
பைம்பொன்மணி மாளிகையிற் குறைவறுத்தார் பஞ்சவனுர் "

என்று பெரியபுராணம் பாடுகின்றது. இங்குச் ' செம்பியனுர் ' என்றும் ' பஞ்சவனுர் ' என்றும் இருபெருவேந்தரையும் ஆர் விகுதி கொடுத்து ஓதியுள்ளமையையும் உற்று நோக்குதல் வேண்டும்.

அப்பர் சுவாமிகள் மகேந்திரவர்மப் பல்லவனைத் திருத்திஞர்கள் ; அப்பர் சுவாமிகளை வணங்கி நன்னெறிநின்ருன் பல்லவன். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான்பெருமாணயனுர் முதலிய மூவேந்தரையும் தொடர்புகொண்டு அருள்நெறி நிற்பித்தார்கள். மாணிக்கவாசகப்பெருமான் அரிமர்த்தனபாண்டியனைத் திருநெறி நிற்பித்தார்கள் ; மண் சுமந்த திருவிளையாடல் நிகழ்ந்தது. திருஞானசம்பந்தப்பெருமான் நின்றசீர்நெடுமாறநாயனுரை உருவாக்கினுர்கள். தீநெறிமாறி நன்னெறிநின்று திருநெறி உணர்ந்தான் பாண்டியன். இதுமட்டுமல்ல; சோழன் சேக்கிழாரை அமைச்சராகக் கொண்டதுடன், ஆனைமீதிருத்திக் கவரி வீசிக் களிகொண்டான் ; திருமுறைகள் அனைத்தையும் கண்டான், இவை எதனைக்காட்டுகின்றன ? சிறிது சிந்தித்துப்பார்த்தல் வேண்டும். அரசர்கள் சமயநெறியோடு இணைந்துநின்று அரசாட்சி செய்தார்கள் ; உயர்ந்தார்கள் என்ற ஒன்றைத்தான் இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் விளக்குகின்றன.

" முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் "

என்ற திருக்குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்தார்கள். மூவேந்தர்களும் தெய்வநீதியோடு ஆள்பவனே மக்கள் தலைவன். அவனே உண்மையான ஜனநாயகம் உடையவன். ஜனநாயகம் என்பது தெய்வநீதி நெறியிலே பக்தி தழைக்க வளரும் தன்மையுடைய அரசு அமைப்பு அல்லவா ?

ஆகவேதான், இந்த ஆவணிமூலத் திருநாளில் மூவேந்தர் பற்றி நினைக்கத் திருவருள் துணைநின்றது. இந்த ஆவணிமூலத்

திருநாளிலேயே இறைவன் மண் சுமந்தான் ; பண் சுமந்தான் என்று காண்கின்றோம்.

" பாய்பரியோன் தந்த பரமானந்தப் பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து—மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளும் தே "

என்று திருக்களிற்றுப்படியார் பாடுகின்றது. உலகம் எல்லாம் உய்யவந்த செந்தமிழ்ச்சொக்கர் திருநாளில் உய்யவந்ததேவ நாயனார் மொழியை எண்ணுவதும் பொருத்தந்தானே ! ஆவணி மூலத் திருநாள் விழா மலராக இன்று திருக்களிற்றுப்படியார் வெளிவரப்பெறுதற்குரிய காரணமும் இதுவே ஆகும்.

மணிவாசகப்பெருந்தகையார் பெற்ற ' பரமானந்தப்பயனே ' திருவாசகம் அல்லவா ? தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானாகிய இறைவன் இயல், இசை, நாடகப் புலவர்க்கு நல்லருள் புரிந்தவன்.

" நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக்கு அருளினோன்காண் "

என்பது அப்பர் திருவாக்கு. இங்கு இயற்புலவராகவே அருளிய திறமும், விறகு விற்ற படலத்து இசைப்புலவராக அருளிய திறமும், மற்ற திருவிளையாடல்களில் ஞான நாடகம் செய்து அருளிய திறமும் நினைக்கத்தக்கவை. ஆதலால் அந்நெறிநின்று திருவருள் உணர்த்த இன்று இங்கே மூன்று சிறப்பு நிகழ்ச்சிகள். ' பைந்தமிழ்ப்பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே ' என்பது குமரகுருபரர் தமிழ். என்றும் பசுமையாக உள்ள தமிழ் அல்லவா ? அதனைக் கற்றதனாலே ' செம்மல் ' உள்ளம் உண்டாகும். அது ' சேவடி படரும் செம்மல் உள்ளமொடு ' என்று நக்கீரர் உரைப்பதனால் நன்கு விளங்குவதாகும். பைந்தமிழைக் கற்றுக் கற்றுக் கற்பித்துக் கற்பித்துச் செம்மல் உள்ளம் உடையவர் ஒரு அறிஞர் ; அவர் நினைக்க முத்திதரும் ' அண்ணாமலை ' என்னும் திருப்பெயரைத் தம் பெயராக உடைய இயற்புலவர். நெல்லையிலே தமிழ்ப்பயிரும் சிவப்பயிரும் வளர்த்துவரும் சொல்லேருழவர், திரு. அருணாசலக் கவுண்டர். பைந்தமிழ்ச் சொக்கர் திருவருளால் ஆதீனத்து பைந்தமிழ்ச் செம்மல்

ஆகின்றார். அடுத்து இசைப்புலவர் பேறும் சிறப்பு. இதற்கு மேல் உழைப்பின் சிறப்புக்குக் கிடைக்கும் பெருஞ்சிறப்பு. இறைவனே உழைப்பின் சிறப்பறிந்த உத்தமன். மண் சுமந்தான்; விறகு சுமந்தான்; வலை வீசினான்; தூது நடந்தான்; கட்டுச்சோறும் தண்ணீரும் சுமந்தான் என்று காண்கின்றோம். அந்நிலையிலே உழைப்புக்குச் செய்யும் சிறப்பு. இந்த மூன்று நன்னிகழ்ச்சிகளையும் உடையதாய் இவ்வாண்டு ஆவணிமூலம் அமைந்து திகழ்கின்றது. மூவேந்தர் நினைவாக - முப்பெருந் தொண்டர்களுக்குப் பாராட்டும் மாட்சியுடன் மூலத்திருநாள் விளங்குகின்றது.

நம் தெய்வத்திருநாடு தோத்திர சாத்திர விழுப்பங்களை உணர்ந்து பழம்பெருமை அறிந்து பண்புநெறி கடைப்பிடித்தல் வேண்டும். அவ்வாறு கடைப்பிடித்து, உலகமெலாம் வாழ அமைதி செழிக்க, அன்பர் திருக்கூட்டம் வளரவேண்டுமெனக் கூறிச் செந்தமிழ்ச்சொக்கர் சேவடிசிந்தித்து வாழ்த்துகின்றோம்.

பத்துப்பாட்டு

வேளூர், க. சொக்கலிங்கம்.

இராகம் - ஆரபி] *[தாளம் - ஆதி*

பல்லவி

முழங்குகின்றாள் தமிழ்மொழியரசி திரு
முருகாற்றுப்படைதன் முடிக்கணியாக்கொண்டு (முழ)

அனுபல்லவி

வழங்கிவரும் பெரும்பாண் சிறுபாணாற்றுப்படை
வாய்ந்தபொரு நர்முல்லைப் பாட்டுடன் வந்துநின்று (முழ)

சரணம்

எழுந்த நெடுநல்வாடை ஏற்றகுறிஞ்சிப்பாட்டு
இன்பந்தரும் மதுரைக் காஞ்சிஎன்றும் அழியாப்
பழமைதழுவிநிற்கும் பட்டினப்பாலை மலை
படுகடாத்தோடு பத்தும் மற்றியிப்பாரெங்கும் (முழ)

ஆவணிமூல விழாவில்

"பைந்தமிழ்ச்சேம்மல்" பட்டம் பேற்ற, இராவ்சாகிப்,

திரு. கு. அருணசலக் கவுண்டர் அவர்கள்

ஆற்றிய

சொற்பொழிவு

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருளுக்கு நான் பாத்திரமானது என் முன்னோர் செய்த பூர்வபுண்ணியம். நான் அவர்களது தனிப்பெருங்கருணையைப் பெற்றிருக்கின்றேன். பத்தாண்டுகளுக்குமுன் நாங்கள் மகாசந்நிதானத்தைச் சந்தித்த பொழுது அடிமையாகிவிட்டோம். அவர்கள் முன்னுல் நாங்கள் எங்களை இழந்துவிட்டோம். மறந்துவிட்டோம். ஆணவம் கரைந்துபோய்விடுகிறது. மகாசந்நிதானத்தைவிட்டு அகன்றவுடன் 'நான்' என்ற ஆணவம் தொடர்கிறது. ஆணவம் எங்களைப் பற்றுமல் இருக்க அருள்செய்ய மகாசந்நிதானத்தை வேண்டுகிறேம்.

இறைவன் தடுத்தாட்கோண்டார் என்பதன் போருள் எனக்கு நீண்டநாள் புரியவில்லை. என்னுடைய அனுபவத்தில் இன்றுதான் அதனை உணர்கிறேன். நான் முப்பதுவருடமாய் இந்துக் கல்லூரியில் வளர்ந்துவருகிறேன். அங்கே அமைந்த வாழ்க்கை என் வாழ்க்கை. என்னுடைய சமுதாயத்தை - தமிழர் சமுதாயத்தை நான் பார்க்கிறேன்; என் மனத்தில் மகிழ்ச்சியில்லை. இந்நிலையில் 'பைந்தமிழ்ச்சேம்மல்' என்ற பட்டத்தை எவ்வாறு பாதுகாக்கப்போகிறேன். இன்றுள்ள நிலையில் எது தமிழ்? என்று எனக்கு இன்னும் புலப்படவில்லை. தோல்காப்பியர் நம்மிடையே இன்று வருவாராஞல் இந்த மக்கள் என்ன பாஷை பேசுகிருர்கள் என்று கருதுவார்? 'இந்தப் புத்தகத்தை நான் நேற்றுக் கடையில் வாங்கினேன்' என்ற வாக்கியத்தில் 'இந்த, என்ற சோல் தோல்காப்பியர்க்குத் தேரியவேதேரியாது. அவர் அறிந்தது 'இ'தான். நான், புத்தகம், நேற்று என்ற சோற்கள் தேரியாது. யான், நெருநல் என்பவையே அவர் அறிந்தன. 'வாங்கியது' என்ற சோற்குத் தோல்காப்பியர் அறிந்தது 'வளைந்தது' என்ற போருள் ஒன்றுதான். இவ்வாக்கியமே

தோல்காப்பியர்க்குப் புரியாது. எனவே தோல்காப்பியம் தமிழா? புறநானூறு தமிழா? நான் பேசுவது தமிழா? தமிழின்மேலுள்ள பக்தியின் பெயரால் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்கிறார்கள். கதைகள், நாடகங்கள், நவீனங்கள் இதைப்பார்க்கும் பொழுது மனம் சுக்குநூருக உடைந்துபோயிருக்கின்றது.

என்னுடைய தாய், தந்தை, தங்கை இருக்கும்பொழுது நான் என் மனைவியோடு பேசினதில்லை. இது நம்முடைய நாகரிகம். திரைப்படத்தில் பார்க்கும்பொழுது காதலனும் காதலியும் கும்மாளம் அடிப்பதைப் பார்த்தால் நம் சமுதாயம் வாழுமா எனத் தோன்றுகிறது. சமுதாயத்தின் லட்சியம் தலைமுறை தலைமுறையாக வந்தது. விதவைகள் தெருவிற்கு வருவதில்லை. பிறர் கண்களிலும் படுவதில்லை. இது பரம்பரை. திரைப்படங்களில் விதவைக்காதல் நடைபெறுகிறது. இதை நாம் அனுமதிக்கிறோம். தலைமுறைக்குப் புறம்பான செய்திகள் நடைபெறும் போது அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். விவசாயம் கூலிவேலை. பத்து வருடம் விவசாயக் கூலியாக இருந்தவன் பிறகு விவசாயம் செய்கிறவனுக வளர்ந்துவிடுகிருன். மேலும் ஐந்தாண்டு கழித்து நிலச்சுவான்தாராகிவிடுகிருன். இயற்கையாக வளர்கிற வளர்ச்சியை நாம் விரும்புவதில்லை. புரட்சி என்பது எளிதல்ல. நடக்கக்கூடியதுமில்லை. பழமையில் பிடிவாதமுள்ளவன் நான். உச்சவரம்பால் இன்று தலைவர்கள் அவதிப்படுகிறார்கள். பழைய காலத்தில் உழத்தியர் பாடல்,

“ இந்திரனை நோக்கி எடுத்தேன் திருவலகு
சந்திரனைச் சாற்றி எடுத்தேன் திருவலகு
காசால் படியளந்தால் கனத்தநேரம் ஆகுமேன்று
நேல்லால் படியளந்தால் நெடுநேரம் ஆகுமேன்று
அரிசியால் படியளந்தால் அதிகநேரம் ஆகுமேன்று
சோறுல் படியளக்கும் எங்களய்யா பண்ணையது ”

இலக்கியத்துறை முதலிய எவற்றிலும் இப்பொழுது ஓர் அவலச் சடங்கு காணப்படுகிறது. தமிழ்ப் புலவர்களைப் பார்க்கும்பொழுது ஆத்திரம் வருகிறது. மாவட்டம் என்று தமிழ்ச்சொல் ஆக்குகிறார்கள். ஜில்லாவின்மேல் கோபம். சர்க்கிளுக்கு, டிவிஷனுக்கு பிர்காவுக்கு என்ன சொல்லுவார்கள் ? என்று கேட்க விழைகிறேன்.

மொழி வளர சமுதாயம் வளரும் என்பது ஒருநிலை. சமுதாயம் வளர மொழி வளருமா? மொழி வளர சமுதாயம் வளருமா? இப்பொழுது இதையெல்லாம் நாம் யோசிக்கவேண்டியிருக்கிறது. என்னைத் தடுத்தாட்கொள்ளும் காரணமாகத்தான் குருமகாசந்நிதானத்தில் பட்டம் வழங்கியுள்ளதாகக் கருதுகிறேன். நாம் நம்முடைய நடைமுறையிலே நிதானமாக இருக்க வேண்டும். தலைமுறையைப் போற்றுவதே நமது தருமம். நல் அறிவையும், நல் ஆற்றலையும் எனக்கு அளிக்குமாறும் நிறைந்த வாழ்த்தை அருளி என்னை வாழ்விக்குமாறும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவடிகளை வேண்டிக் கொண்டு என் சிற்றுரையினை முடிக்கின்றேன். வணக்கம்!

EXTRACT FROM THE VISITORS' BOOK,

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

The most reputed Vaithiswarankoil is an attraction for millions of suffering people Sri Vaithiswaraswami is a healer of diseases both physical and mental. The temple as usual is kept in a very good condition. The servants of the temple are taking keen interest in the administration of the temple.

Sd. V. Balaramaiah
District Magistrate,
Cuddalore.

25—5—61.

The temple has been kept delightfully clean and the visitors & devotees courteously looked after. There is an atmosphere of peace and good behaviour all round.

Sd. S. Balakrishna Shetty,
Inspector General of Police,
Madras.

14—7—61

சேந்தமிழ்ச்சேல்வரின் சிறப்புக்கவிதை

சேந்தமிழ்ச்சேல்வர்,

திரு. கி. வா. ஜகந்நாதன் M. A.,

புயலாரும் வான்போழியப் போங்கிவரு
பெருவேள்ளம் போந்து பூவில்
வயலாரும் வளங்கோழிக்கும் திறம்போலக்
கருணையேனும் வாரி போக்கி
அயலாரச் சிவசமயப் பயிர்தழையத்
தமிழ்ப்பயிரும் அணியாய் ஓங்கச்
சேயலாரும் சீர்ச்சுப்பி ரமணியப் பேர்த்
தேசிகனர் திருத்தாள் போற்றி. (1)

தருமபுரம் எனும்பேயர்க்கு வணக்கம்போல்
பலசேயலும் சாரச் சேய்து
கருமநலம் பூத்தஇட மாவிளங்க ஆக்குகின்ற
கருணைத் தேவே
பேருமைபேறுங் கயிலாய பரம்பரையேன்
பதுதேளியப் பேணுங் கைலைத்
திருவமரு மலைசேன்று பார்போற்ற எழுந்தருளும்
தேசி கேச. (2)

நாவலர் போருளேற நலஞ்சேய்து சைவநலம்
நாளு மோங்கச்
சேவைசேயும் ஞானகுரு மூர்த்தியேன
நினையுலகம் சிறப்பிக் குங்காண் ;
ஆவணிமு லப்பேரிய விழாவிலின்று
தமிழ்ப்புல்வர்க் கரிய பட்டம்
மேவும்வகை சேய்துயர்போன் னுடைசூட்
டும்வண்மை வியத்தற் பாற்றே. (3)

இனியமொழி யுடையன்நட்புக் கேற்றபண்பி
னிற்பெரியன் ; எதுசொன் ஞலும்
கனிவுபெறச் சொலுமியல்பான் ; தமிழ்பயிற்றும்
பேராசான் ; கவின்சார் நெல்லை
தனிலெவரும் கொண்டாடும் அருணுச
லக்கவுண்டர் என்னத் தாங்கும்
நனியெழில்கொள் பேராளன் பைந்தமிழ்ச்செம்
மற்பட்டம் நல்கப் பெற்ருன். (4)

நின்னுடைய பெருங்கருணைக் கிலக்காகும்
பேறுபெற்ருர் நீளும் சீரும்
பொன்னுடைய நிலையுமுயர் கலைநிலையும்
பெற்ருேங்கிப் பொலிவார் ; இந்த
இன்னியல்சேர் அருணுச லப்புலவன்
வடிவேலன் இயல ருட்குத்
துன்னுநலப் பாத்திரமாப் பைந்தமிழின்
செம்மலாத் தோன்றி வாழி. (5)

அருள்கொழிக்கும் கயிலாய பரம்பரையில்
தருமைநில வாதீ னத்தின்
தெருள்கொழிக்கும் திறம்வாழி சைவசம
யப்பெருமை சிறந்து வாழி
மருளழிக்கும் நின்னுடைய பெருநலங்கள்
எஞ்ஞான்றும் வாழி வாழி !
உருளுலகத் தினிற்றமிழும் சிவனருளால்
மேன்மேலும் ஓங்கி வாழி ! (6)

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்

மடையறத் தாக்கும் பெருவெள்ளம் பெய்யுமழைக்கெடுத்த
குடையறத் தாக்கும் பெருங்காற்று ஞானக் குரவரையு
நடையறத் தாக்கு மிளமுலையார் கண்கள் ஞாலத்தென்றுந்
தடையறத் தாக்குந் தலைவிதி யென்றறி தாழ்குழலே.

சிவஞான போதம்

கட்டுரை 31

முதுபெரும் புலவர்
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

(மலர் 20, இதழ் 9, பக்கம் 506 இன் தொடர்ச்சி)

இலக்கணவியல்

நான்காவது சூத்திரம்

சிவஞானபோதம் :-

1 " அந்தக் கரணம் அவற்றின் ஒன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே. "

சிவஞானசித்தியார்

2 " உணர்வன கரணம் என்னின் ஒன்றையொன் றுணரா வேவ்வே
றணைதரும் செயல்கள் நான்கும் அறிந்தவை அடக்கி ஆக்கிப்
புணரும்உட் கருவி யாக்கிப் புறக்கரு வியினும் போக்கி
யிணைதரும் இவற்றின் வேரு யான்என தென்ப தான்மா. "

பொழிப்புரை (முதலதிகாரணம்)

3 (அ) ' ஈண்டு இவ்வான்மா ஆவது அந்தக்கரணங்களாய் உள்ள மனோபுத்தியகங்கார சித்தங்களில் ஒன் றன்று என்றது ; அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான். '

சூர்ணிக் கொத்துரை

' அந்தக் கரணங்களுக்கு உயிர் உட்கூடினால் அன்றித் தொழில்
இல்லாத படியினாலே அந்தக் கரணங்களுக்கு வேருய் உயிர்உண்டு. '

பொழிப்புரை (இரண்டாவது அதிகரணம்)

(ஆ) 'இனி இவ்வான்மாச் சகசமலத்தினல் உணர்வு இன்று என்றது; அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொண்டு நிற்றலான்.)

சூர்ணிக் கொத்துரை

'மல மறைப்பால் உயிருக்கு அறிவில்லை.'

பொழிப்புரை (மூன்ருவது அதிகரணம்)

(இ) 'இனி இவ்வான்மாச் (1) சாக்கிரம் (2) சொப்பனம் (3) சுழுத்தி (4) துரியம் (5) துரியாதீதமாய் உள்ள பஞ்சாவத்திதனுய் நிற்கும் என்றது; அதுதான் மலசொரூபத்தின் மறைந்து அருபசொரூபியாய் நிற்றலான்.'

சூர்ணிக் கொத்துரை

'உயிர் மூன்று அவத்தைப் படும்.'

சிவஞானபோத வெண்பா

முதலதிகரணம்

4 (அ) "மனம்ஆதி யால்உணர்தல் *மன்னு புலன்கள்
மனம்ஆதி மன்புலனின் அல்லன்—மனமேல்
உதித்தோன்றை உள்ளம் உணர்தல் அதனின்
உதிக்கும் கடற்றிரையை ஒத்து."

(ஆ) ‡ "சிந்தித்தாய்ச் சித்தம் தெளியாதா யாங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகிப்—பந்தித்து
வேவ்வேறு தானே துணிந்துள்ளம் இவ்வேரும்
அவ்வேரும் போதுபோல் ஆங்கு."

---

* 'மன்னும்' என்றும் பாடம் உளது. அதுவே சிறந்தது.

‡ 'சிந்தித்தாம்', 'தெளியாதாம்', 'மனமாகும்' என்றும் பாட பேதம் உள. இவற்ருல் மூன்றும் தனித்தனி வாக்கியம் ஆதல் உணர்க. எல்லாப் பதிப்புக்களையும் ஒருங்குவைத்துணர்தலால் இவ்வுண்மையைக் காணலாம்.

(இ) " அகார வுகாரம் அகங்காரம் புத்தி
மகாரம் மனம்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாதம் உளவடிவா நாடிற் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று. "

இதில், 'அகாரம் உகாரம்' என்றுள்ள பதிப்பும் உண்டு. அதுவே பொருத்தம் உடையது.

(ஈ) " எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவோடு நாதத்துக்—கண்ணிற்
பகர்அயன்மா லோடு பரமன் அதி தெய்வம்
அகரவுக ரம்மகரத் தாம். "

இதற்குள்ள, முனிவர் உரையும் தேசிகர் உரையும் மாறுபடுகின்றன.

இரண்டாவது அதிகாரணம்

" மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணுதேல்
ஆயாதாம் ஒன்றை அதுஅதுவாய்—வீயாத
வன்னிதனைத்தன்னுள்மறைத்தோன்றும்காட்டம்போல்
தன்னைமலம் அன்றணைதல் தான். "

'விளக்காய்' 'வீயாது' என்றும் பாடபேதம் உண்டு.

மூன்றாவது அதிகாரணம்

(அ) " ஒன்றணையா மூலத் துயிரணையும் நாபியினில்
சென்றணையும் சித்தம் இதயத்து—மன்றவே
ஐயைந்தா நன்னுதலில் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு. "

'இதயத்தில்' 'கண்டத்து நன்னுதலில்' என்னும் பாடபேதம் உண்டு.

(ஆ) " இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்
இலாடத்தே ஐந்தவத்தை எய்தும்—இலாடத்தே
அவ்வவ் இந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
அவ்வவற்றின் நீங்கல்அது ஆங்கு. "

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்



சென்னை மாநில அறநிலைய அமைச்சர் 'நல்லறங் காவலர்'
கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L. அவர்களுக்கு அளித்த வரவேற்பு.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

வெள்ளத்தால் அவதியுற்றோருக்கு அன்னம்பாலித்தல்.

'கண்டடைவே', 'அவ்வவற்றை', 'நீங்கில்' என்னும் பாடபேதம் உண்டு.

இதைக் கற்கும் அன்பர் பலரும், சூத்திரப் பொருளைத் தெளிய உணர்தல் வேண்டி, ஒரே கருத்து வெவ்வேருசிரியரால் எவ்வெவ்வாறு வெளியிடப்படுகின்றது என்றறியும் வண்ணம் போதம், சித்தி, சூர்ணிகை வெண்பா நான்கும் ஒருங்கு எழுதப்பட்டுள. அவற்றை அதிகரணப்பாகுபாட்டிற் கேற்ப உணர்ந்து தெளிதல் நன்று.

சூத்திரப் பொருள்

1. ஆன்மா அந்தக்கரணங்கள் ஆகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கனுள் ஒன்று அன்று. (அஃதாவது:— ஆன்மா மனமும் அன்று, புத்தியும் அன்று, அகங்காரமும் அன்று, சித்தமும் அன்று, நான்கினும் வேருனது ஆன்மா என்றதாம். ஆதலின், அந்தக்கரணமே ஆன்மா என்று கூறும் மதம் இதனுல் மறுக்கப்பட்டதாயிற்று.) ஆயினும்,

2. அரசன், தனக்கு நுண்ணுர்வு இன்மையின், சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சரோடு கூடி நின்று தன் தொழில் நடத்துவான். அவ்வரசனைப்போல ஆன்மாவும் சகஜ மலத்தால் உணர்வு இன்றிக் கஞ்சுகம் போலும் கலாதிகளால் பொதுவகையால் உணர்வு நிகழினும், சிறப்பு வகையால் உணருமாறு தனக்குச் சூழ்ச்சித் துணையாகிய அவ் வந்தக்கரணங்களோடு கூடி நின்று சாக்கிரம் முதலிய ஐந்தவத்தை உடையதாகும்.

விஞ:— இச் சூத்திரம் எதை உணர்த்தக் கருதியது.

விடை:— ஆன்மாவினது இலக்கணத்தைக் உணர்த்தக் கருதிற்று.

விஞ:— முன்னே சொன்ன (மூன்ருவது) சூத்திரமும் ஆன்மாவைப்பற்றியதுதானே. அதில் இதைச் சொல்லியிருக்கலாமே. தனியாகச்சொல்லியது ஏன்?

விடை:— பொருளின் உண்மையை (இருப்பை)ப் பிரமாணத்தாலும், இலக்கணத்தாலும் பெறல் வேண்டும். முதல் மூன்று சூத்திரங்களில், பதி, பாசம் பசு என்னும் முறையில் முப் பொருளையும் பிரமாணத்தால் பெற வைத்த ஆசிரியர், அடுத்த மூன்று சூத்திரங்களில் பசு, பாசம், பதி என்னும் முறையில் வைத்து முப்பொருளையும் இலக்கணத் தால் பெற வைத்தார். 'எதிர் நிரல் நிறை' என்னும் முறைப்படி அமைத்தார் ஆதலின். சூத்திரங்களுள் முதலும் ஆறும் பதிக்கும், இரண்டும் ஐந்தும் பாசத்திற்கும், மூன்றும் நான்கும் பசுவிற்கும் உரியவாயின. அவ்வாற்றால், மூன் றாவது சூத்திரம் பிரமாண முகத்தால் பசுவின் உண்மையை உணர்த்திற்று. இந் நான்காவது சூத்திரம் இலக்கண முகத்தால் பசுவினைப் பெறுவிக்கின்றது.

சூத்திரப் பொருளில் உணர்த்தியவாறு, ஐந்தவத்தைப் படுதல் ஆன்மாவிற்கு இலக்கணம் என்பது பெற்றாம். இவ் விலக்கணத்தால் 'பசு' எனப்படும் பொருளைப் பெற வைத்தார் ஆசிரியர். இஃது உயிர்க்குப் பொது வியல்பு (தடத்த லட்சணம்). 'அவை சந்தித்தது' என்றதற்கு அவற்றோடு சந்தித்தது என்றோ அவற்றைச் சந்தித்தது என்றோ பொருள் கொள்க. எழுவாய்த் தொடர் ஆக்கின், ஒருமை பன்மை மயக்கமாம். மலத்து - மலத்தால்.

உணராது சந்தித்தது என்று இயைத்து, உணராமை யால் சந்தித்தது எனப் பொருள் கொள்க. இந்நிலை காரண காரியப்பொருட்டு. 'சந்தித்தது வினையெச்சமுற்று' ஒன்று அன்று ஆயினும் சகசமலத்து உணராது அமைச்சரசு ஏய்ப்ப அவற்றோடு "சந்தித்தது" நின்று அஞ்சவத்தைத்து ஆம் என்று இயையும்.

'இவ்வாறு அன்றி, ஆன்மா அவற்றின் ஒன்று அன்று 'ஆயினும்' சகசமலத்து உணராமையால் அவற்றோடு சந்தித்தது; சந்தித்தவழி அவையும் தானும் அமைச்சு அரசு எய்ப்ப நிற்றலான், ஐந்து அவைத்தைத்து ஆயிற்று என அதிகரணம் பகுத்துக் கொள்ளற்கு ஏற்ப வேறு வேறு வினை முடிபு செய்துரைத்தலும் ஒன்று'.

ஆயினும் என வருவித்து ஒரு தொடராகவைத்துரைக்க அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று. ஆயினும் எனவே அவற்றின் ஒன்று அன்ருதலும் அநுவாதமுகத்தால் ஈண்டேபெற்ரும்.

அநுவாதம் - வழி மொழிதல். முன்னேபெறப்பட்டதையே வேருென்று விதித்தற் பொருட்டுப் பின்னும் எடுத்துரைத்தல் அதனுல் கூறியது கூறல் என்னும் குற்றம் ஆகாது.

'நின்று' என்னும் வினையெச்சம் காரணப் பொருட்டு. அஃது (அஞ்சு) அவத்தைத்து என்னும் வினைக்குறிப்பு முற்ருெடு முடிந்தது.

'அமைச்சரசு' என்னும் தொடரை (அமைச்சும் அரசும் என) உம்மைத் தொகையாக் கொண்டு விரித்துரையாமல், அமைச்சரோடு கூடிய அரசு என உருபும் பொருளும் உடன் தொக்க தொகையாகக் கொள்க. இராப்பகல் என்பது இராவோடு கூடியபகல் எனக் கோடல் பொருந்துமோ எனலாம். கண்ணன் தன் படையால் மறைத்துக் காட்டியதைக்குறிக்கின் அதுவும் பொருந்தும்.

இச் சூத்திரம் மூன்று அதிகரணம் உடையது :-

1. அந்தக்கரண மவற்றின் ஒன்றன்று.

2. (ஒன்றன்று ஆயினும்) சகசமலத் துணராது அமைச்சரசேய்ப்ப அவை சந்தித்தது.

3. அமைச்சரசேய்ப்பநின்றஞ்சவத்தைத்தே.

ஆன்மா என்னும் சொற்குப் பொருள் வியாபகம் என்பதூஉம் சித்தசித்து என்பதூஉம் ஆம்' என்று சிவஞான மாமுனிவர் எழுதியருளியதை உளங் கொள்ளல் வேண்டும். இதனை ஏழாவது சூத்திரத்து முன்ருவததிகரணத்து இரண்டாவது வெண்பாவின் உரைக்கண்ணும், சித்தியாரில் (158) சுத்ததத்துவங்கள் என முதலும் திருவிருத்தத்திலும் (203) அசித்துஎனின்' எனத் தொடங்கும் திருவிருத்தத்திலும் காண்க.

(தொடரும்)

சிலம்பில் வாழ்வியல்

வித்துவான்,

ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

சிலம்பு

அழகிற்கு அழகு செய்து அதில் ஒரு இன்பம் காண்பவர் தமிழர். தமிழகத்தில் தமிழ்ச் சமுதாயம் நாகரிகமெனக் கருதி அணிந்திருந்த அணிகள் இன்றில்லை. இன்று அது அநாகரீகமாகி மறைந்துவிட்டது. அவற்றுள் ஒன்று சிலம்பு. இது பெண்களின் கால்களை அழகுபடுத்தும் அணி. இதனைக் கண்ணகி தன் இளமைப் பருவத்தே அணிந்திருந்தாள். ஊழ்வினை வந்துறுத்த அவள் அணிந்திருந்த சிலம்பு காரணமாக எழுந்த காவியம் சிலப்பதிகாரம்.

மனிதநிலை மாறிய தெய்வநிலை

குடிமக்கள் காப்பியமாக நின்று விளங்கும் சிலம்பின் தலைமக்களான கோவலனும், கண்ணகியும் இல்லறநெறி நின்று வாழ்ந்தவர்கள் ஊழ்வினையினால் இருவரும் பூம்புகாரை விட்டு மதுரை மாநகரம் சென்றனர். ஆங்கே கோவலன் கொலைக்களப் பட்டான். மண்மகள் அறியாவண்ணச் சீறடி கண்ணகியும் துயருறு நிலையெய்தி பாண்டியன் அரசவை சென்று வழக்குரைத்துப் பழம்பெரும் நகரமான மதுரை மாநகரைத் தீப்பற்றி எரியச்செய்து பின்னும் சீற்றம் தணியாத நிலையினளாய்ச் சேர நாடு நோக்கிச் சென்றனள். சென்று திருச்செங்குன்று என்னும் மலைமீதேறி ஒரு வேங்கை மரத்தின்கீழ் நின்றிரங்க ஆங்கே தேவருலகினின்று தேவ வடிவுடன் கோவலன் தோன்றினன். அவனைக் கண்ணகிக்குத் தேவர்கள் காட்டிட அவனுடன் வான ஊர்தியில் ஏறிக் கண்ணகி தேவருலகம் புகுந்தனள். இதனை இளங்கோ,

'' அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் றன்னொடு
வான வூர்தி ஏறினள் மாதோ
கானமர் புரிகுழற் கண்ணகி ''

(சிலப். கட்டுரைக்காதை. 197 - 200)

என்றார்.

இதனால் மனிதன் தெய்வநிலையைச் சார்கின்றமையை அறிகின்றோம். தெய்வப்பிறவியைச் சாருதலே மனிதப்பிறவி யின் இலட்சியம். இந்த இலட்சியத்தில் வாழ்ந்தவர்கள் சிலப்பதி காரக் காப்பியத் தலைவர்களாதலின் இவர்கள் தம் வாழ்வியலை யும் இவர்கள் காலத்திய மூவேந்தர்கள் - குடிமக்கள் வாழ்வியல் களையும் இவ்வரலாற்றுக் காப்பியம் வாயிலாகக் காணுதல் பயன் தரும்.

காப்பிய வாழ்த்து

நூலாசிரியர் தாம் எடுத்துக்கொண்ட நூல் இனிது முடிய வும் அந்நூல் என்றும் நின்று நிலவவும் ஏற்புடைக் கடவுளை வாழ்த்தி நூலைத் தொடங்குதல் மரபு. இளங்கோவடிகள் அம் முறையில் தம்நூலான சிலப்பதிகாரத்திற்குக் கடவுள் வாழ்த்துக் கூறினாரல்லவா. அம்முறையை மேற்கொள்ளாராய் எல்லாச் சமயத்தவராலும் ஒப்பப் போற்றப்பெறும் திங்களையும், ஞாயிற் றையும் மழையையுமே வாழ்த்தி இருப்பது எல்லாச் சமயத் திடத்தும் விருப்பு - வெறுப்பற்ற - பொது - நோக்குடைய அவரது தன்மையைப் புலப்படுத்தி நிற்கின்றது.

சிலம்பு தொடர்நிலைச் செய்யுள் காவியமாய் மிளிர்தலின் மங்கலப் பொருளான திங்களை முதலில் வைத்து வாழ்த்தி இருப்பது காப்பியநலனின் சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட் டாய் விளங்குகின்றது.

'' திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான் '' (சிலப். மங்கல வாழ்த்து 1 - 3)

மேலும் திங்களும், ஞாயிறும், மழையுமே உயிர்கட்கு இன்றியமையாது வேண்டப்பெறுவதொன்றுமாதலின் இந்நூல்

முகத்து அவைகளையே வாழ்த்துப் பொருளாகக்கொண்டு காப்பியத்தைத் தொடங்கியிருப்பது இளங்கோவடிகளின் உயரிய பண்பினைப் புலப்படுத்தா நிற்கின்றது.

மூவேந்தர்களுக்கும் உரிய காவியமாய்ச் சிலம்பு இருப்பினும் பூம்புகார்நகரைமட்டில் நூலின் துவக்கத்தே ஆசிரியர்,

" பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலியுலகிற் கவன் குலத்தோடு
ஓங்கி பரந் தோழுகலான் "

(சிலப். மங்கல வாழ்த்து 10 - 13)

என வாழ்த்தியிருப்பது சோழர் தம் தலைநகரான புகாரின் தனிச் சிறப்பிற்குச் சான்றுயுளது.

வளங்கெழுமிய - அழிவில் நகரம்

வளமார்ந்த வாழ்வுக்குரிய பொருள் கருதியோ, அல்லது பகை நோக்கியோ தம் - பதி நீங்கிச் செல்லா அளவில் செல்வ வளம் சிறப்புற்றுள்ளது பூம்புகார். மேலும் பொதியமலையிலும், இமயமலையிலும் இருடிகளும், இறைவனும் நிலைபெற்றிருத்தலின் அவற்றிற்கு அழிவில்லை எனப் புலனழுக்கற்றவர்கள் கூறுவதுபோல, கோள்வதூஉம் மிகைபடாது, கோடுப்பதூஉம் குறைபடாது தம்முடையவும், பிறருடையவுமாய பொருள்களை ஒப்ப நாடி வாணிபம் செய்பவர்கள் பூம்புகாரில் மிகுதியாக நிலைபெற்றுள்ளமையான் அந்நகருக்கும் அழிவில்லை என்பாராய்,

" போதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
போதுவறு சிறப்பின் புகாரே யாயினும்
ஒடுக்கங் கூருர் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந்தோரே "

(சிலப். மங்கல வாழ்த்து 14 - 19)

என்கின்றார்.

உயரிய உலகுடன் ஒப்பிட்டுப் பேசப்பெறும் நகரம்

பூம்புகார் துறைமுகம் நோக்கி வந்த பண்டங்கள் புலி இலச்சினை பொறிக்கப்பெற்று, பண்டகசாலை முன் மலைகள்

போல் காட்சி அளிக்கும் பல்வேறுமொழி வேறுபட்ட தேயத்திலிருந்து வந்த கலங்கள் பண்டங்களை இறக்கியவண்ணமாகவும், இவ்விடமிருந்து தன் தேயங்களுக்கு ஏற்றியவண்ணமாகவும் இருக்கும். இன்னோரன்ன சிறப்புக்களால் நலன்களெல்லாம் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஒரு பெருநகரமாய் விளங்குவது பூம்புகார். இதனைச் சுவர்க்க உலகத்துடனும் நாகருலகத்துடனும் ஒப்பிட்டுப் புகழும் போகமும் நிலைபெற்ற நகராகவும் காண்கின்றார் இளங்கோ.

" நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ் மன்னும் புகார். "

(சிலப். மங்கல வாழ்த்து. 21-22)

தன்னிகரில்லாத் தலைமக்கள்

இருபெரும் பிரிவாய் உள்ள புகார்நகர்தனிலே செல்வ வணிகருடைய மாடமாளிகைகள் நிறைந்ததாக விளங்குவது பட்டினப்பாக்கம். அப்பாக்கத்தில் வண்மையில் சிறந்த மாநாய்கன்குலக் கொம்பரும், தாமரை மலரில் உறையும் திருமகள் போலும் அழகும், விண்ணில் நிலவும் அருந்ததி போலும் கற்பும் உடையவளாய் விளங்குபவள் கண்ணகி.

" போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்னுங் கண்ணகி. "

(சிலப். மங்கல வாழ்த்து. 26-29)

ஆங்கே, செல்வத்திலும் வண்மையிலும் சிறந்தோங்கிய மாசாத்துவன் மகனாகவும், புகழ்பரவப் பூமிசிறுகலான் மண் தேய்த்த புகழினனாகவும் மடவார்களால் தன்னைச் செவ்வேள் என்று பாராட்டப்பெறும் சிறப்பினை உடையவனாகவும் திகழ்பவன் கோவலன்.

" மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசை போக்கிக்காதலாற்
கொண்டேத்துங் கிழமைவான் கோவலன் "

(சிலப். மங்கல வாழ்த்து. 36-39)

என தன்னிகரில்லாத் தலைமக்களை இளங்கோவடிகள் அறிமுகப் படுத்துகின்றார்.

ஏற்றத்தாழ்வில்லை

திருமணம் செய்துவைக்கக் கருதும் முதியோர்கள், தலைமக்கள் இருவர்தம் பொருத்தமனைத்தும் பார்த்துத் திருமணம் செய்துவைப்பது வழக்கு. பொருத்தமின்றி திருமணம் நிகழ்வுறுமேல், அத்தலைமக்கள் வாழ்வில் நிலைத்த இன்பம் நிலை கொள்வது எப்படி ? இன்பம்நிலையா வாழ்வை ஒரு வாழ்வாகக் கொள்ளமுடியுமா ? தொல்காப்பியரும் மெய்ப்பாட்டியலுள் தலைமக்களுக்கான பொருத்தமனைத்தையும்,

"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறைவே யருளே உணர்வோடு திருவென
முறையுருக் கிளந்த ஒப்பினது வகையே, "

(தொல்காப், மெய்ப்பாட்டியல். 25.)

பொருத்தமனைத்தும் கோவலன் கண்ணகிபால் ஏற்றத்தாழ்வில்லாத நிலையில் பொருந்தியுளது.

எண்வகை மணத்துள்

மாசாத்துவான் மகனாகிய கோவலனுக்கும், மாநாய்கன் மகளாகிய கண்ணகிக்கும் இருமுதுகுரவர்களும் ஒரு பெருநாளிலே மணவணிகாண விரும்புகின்றனராதலின் தொல்காப்பியர் கூறும் எண்வகை மணத்துள் இத்திருமணம் பிரசாபத்தியத்தின்பாற் கொள்ளப்பெறுவதாகும். அதாவது மகட்கோடற்குரிய கோத்திரத்தார் மகள்வேண்டியவழி இருமுதுகுரவரும் கொண்டும் கொடுத்தும் நிகழ்வது. இதனை,

"இருபெருங் குரவரும் ஒருபெரு நாளில்
மணவணி காண மகிழ்ந்தனர். "

(சிலப், மங்கல வாழ்த்து. 41-42)

கோவலன் கண்ணகி திருமண அறிவிப்பு

பூண்பன பூண்டு புனைவன புனைந்து விளங்கும் அணியிழையாள் ஒருத்தியை அலங்கரிக்கப்பெற்ற யானையின்மீது அமரச்

செய்து திருமணச் செய்தியை மாநகர் முழுவதும் அவள் தன் இனியகுரலினுல் எடுத்தியம்ப திருமணம் அறிவிக்கப்பெறுகிறது.

" யானை எருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம். "

(சிலப். மங்கல வாழ்த்து. 43-44)

மணம் ஏற்ற கோவலன் கண்ணகி வாழ்வில் மாதவி குறுக்கிடுகிருள். ஊழ்வினை கோவலன் மாதவியைப் பிரிக்கிறது. அரசியல் பிழைத்த பாண்டி மன்னனை அறநேறி கோல்லும் காட்சி மதுரைக் காண்டத்திலே காண்கிறோம். உரைசால் பத்தினியை உலகம் பாராட்டும் நிலையை வஞ்சிக் காண்டம் சித்தரிக்கிறது.

இவ்வாறு மூன்று நீதிகளை விளக்கும் சிலம்பு தமிழிலக்கியங்களில் தலையான காப்பியமாக விளங்குகிறது.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

By the grace of God, we had a chance to pray to the Almighty of the temple at Vaithiswarankoil and have His blessings. We are sure that we will be getting back with abundance of good luck and prosperity for which the Adhinam is responsible. May His blessings be on those that have not so far paid their homage to the Lord of the Temple

With prayers

Sd. Shanmugam,
Deputy Registrar, Executive officer, Salem.

Sd. V. Ramalingam.
Secretary, Salem Co-op-Central Bank, Salem.

Sd. P. M. Manickam chetty

Sd. S Govindarajulu

Sd. D Charanathan

21—5—61 Sd. K. Appavu Pillai M. L. A. Hosur.

மருத நாட்டு மங்கை

செஞ்சோற்கோண்டல்

வித்துவான். சொ. சிங்காரவேலன். B. A.

(மலர் 20, இதழ் 9, பக்கம் 514 இன் தொடர்ச்சி)

துடிக்கின்ற தென்னுள்ளம் ; கூறாய் '' என்றான்
தோன்றியவப் பெருவீரன் ; அடியான் சொல்வான்:—
வெடிக்கின்ற நறுமணத்தால் இயற்கைச் செல்வ
வெற்றியினால் சிறந்திடுமித் தமிழ் நாட்டைப்
பிடிக்கின்ற ஆற்றலுள்ள மகத நாட்டுப்
பேர்ரசே! இன்னுமிரு திங்கட் குள்ளே
அடிக்கின்ற தாம்நமக்கு அரச யோகம் ;
அதற்குள்நம் பிறபணிகள் முடிதல் வேண்டும். 34

ஒற்றர்கள் நாடெங்கும் பரவி விட்டார் ;
ஊர்மக்கள் உள்ளத்தை மாற்றி மாற்றிப்
புற்றீசல் என அவரைக் கூட்டு வித்துப்
பொய்யுரையால் மெய்யர்தமை மெல்ல மெல்ல
எற்றுக்குப் படைத்தலைவன் கீழே இந்நாள்
இருக்கின்றீர் ? கிளர்ந்தெழுவீர் ! என உரைத்துத்
தெற்றெனநற் சூழ்ச்சிபல செய்த தாலே
தேய்ந்தமதி யுடையோராய் மக்கள் பல்லோர் 35

படைத்தலைவன் வீழ்கவென முழங்கி விட்டார் ;
பகுதிபகுதி யாய்ப்பிரிந்து கொடிகள் தூக்கிப்
படைபடையாய் வீதிகளில் திரளு கின்றார் ;
பார்வைக்கும் அவர்போலே வேட மாறி
அடைந்துவரும் நம்வீரர் திறமை கட்கு
அளவில்லை ; அரசே ! இந் நிலைமை இன்னும்
மடைதிறந்த வெள்ளமெனப் பெருகி விட்டால்
மடிந்ததுநல் மருத நிலம் : மகதம் ஓங்கும் ! 36

எனப்பெரிய சொற்பொழிவை இயற்றுவான் போல்
எழுச்சியோடும் உரைத்துநின்ற வச்சிர வேளின்
முனம்மகிழ்ந்த வடநாட்டு அரசன் பின்னும்
முகத்தினிலே பெருமகிழ்ச்சி தேக்கி நின்முன் ;
'' தனக்குவமை யில்லாத மகத நாட்டுத்
தனிச்சிங்க வேறனையாய் ! வச்சிர வேளே !
உனையனையார் பலரிருக்கத் தளர்ச்சி கொள்ளேன் ;
உருமாறிப் பின்னொருநாள் வருவேன் ; மற்ற 37

எதனாலும் குன்றாது கிளர்ச்சி செய்வீர் ;
ஏற்றவொரு தருணத்தே ஓலை போக்கி
எதனாலும் தளராத நம்படைகள்
எல்லாவற் றையுமிங்கே திருப்பிக் கொள்வீர் !
எதனாலும் குறையாத தமிழர் நாட்டை
இணைத்திடுவீர் மகதமெனும் இனிமை யோடு !
எதனாலும் குன்றாதீர் என்று கூறி
இருளடைந்த காட்டிற்குள் மறைந்து சென்றான் ! 38

கரியவிருள் வழியெல்லாம் பரவி நிற்கக்
காருடையிற் காட்டரசி பதுங்கி நிற்கப்
பெரியபெரு மாளடியான் போலே தோன்றும்
பின்னிடாச் சூழ்ச்சியுடை மகத வீரன்
தெரிவரிய ஆற்றலுடை வச்சிர வேளன்
திருநாட்டுப் புறநோக்கும் பாதை தன்னில்,
அறிவரிய சூழ்ச்சிமனத் துடைமை யோடு,
அயர்வின்றி வீறுடனே நடக்க லானான் ! 39

4. "பகைவரைச் சாய்ப்போம் !"

'' ஒளியப்ப ரேநமது மருத நாட்டை
ஒருகூட்டம் பிரித்தாள எண்ணி யின்று
தெளிவின்றிப் புறப்பட்டு விட்ட தென்று
தெரியவர, உளங்கலங்கித் திகைத்தல் செய்வேன் ;
நெளிவின்றி நெஞ்சிலொரு தீமை யின்றி
நிலையாக நின்றிருக்கும் நம்நாட் டுள்ளே
ஒளிந்துறையும் கொடியவரால் வந்த திந்த
ஒருநிலைமை '' என்றுரைத்தார் மருத வேந்தர் ! 40

அஞ்சுகின்றேன் ; வியக்கின்றேன் ; அரசே ! இந்நாள்
அறிகின்ற விச்செய்தி நந்நாட் டிற்கே
விஞ்சுகின்ற புதுச்செய்தி ; உலகந் தன்னில்
வியத்தகநாம் வேற்றுமையில் ஒன்று பட்டு
செஞ்சோலீனக் காத்துநிற்கும் மறவர் கூட்டம் ;
சேழுமையும்நல் லறத்தினது கோழுமை யோடு
நெஞ்சுறவே நிமிர்கின்ற நம் நாட்டுள்ளே
நிலைமாறித் திரிகுவதா ? நெஞ்சம் சோரும், 41

படைத்தலைவர் வீரப்பர் பழுது பட்டார் ;
பறிபட்டார் குடிமக்கள் உரிமை யென்று
படைத்துறையிற் றிறம்பெற்றார் கூறக் கேட்கும்
பரிசிந்நாள் கேளாத புதுமை யாகும் ;
அடைத்துயர்ந்த வெண்கோற்றக் குடையோய் ! தீர
ஆராய்ந்து அறம்காண வேண்டும் '' என்றார் ;
உடைத்தமணிப் பரல்போல நெஞ்சிற் கூடி
ஒலிக்கின்ற கருத்துகளால் சோர்ந்தார் வேந்தர் ! 42

''வணக்க ''மென்ற குரல்கேட்டு நிமிர்ந்தார் வேந்தர் ;
வணேந்துவிட்ட ஆணழகாய் ஆற்றல் ஏருய் ;
பிணக்கமிலாத் திருவீரம் பிறங்கு கின்ற
பெருமலையாய் வீரப்பர் வணங்கி நின்றார் ;
''மணக்கின்ற மல்லிகையாம் மருத நாட்டில்
மனிதகுலக் குறும்பர்சிலர் கிளர்ச்சி யென்று
எணக்குவிந்தார் ; ஏதேதோ முழக்குகின்றார் ;
எதுவேந்தர் திருவுள ''மென் றிரந்து நின்றார் ! 43

''ஒற்றர்படை யாலறிந்த உண்மை கண்டீர் !
ஒளியப்பரே ! படையின் தலைவர் ஏறே !
முற்றவிந்தத் தேன்றைடு வடக்கே ஓங்கும்
முதல்மகத நாட்டினுக்கு அடங்கி நிற்கக்
கற்றிடல்வேண்டும் என்று கருதிச் சில்லோர்
களித்திந்தக் கலகத்தை யெழுப்பு கின்றார் ;
தேற்றேனவிச் சிறுகுறும்பை யடக்க வேண்டும் ;
திருநாட்டின் பெருமைதனைக் காக்க வேண்டும் ! 44

நெஞ்சுரத்திற் சிறந்தவர்நாம் ; அறத்தின் பக்கம்
நிலைத்திருப்போர் ; நீதிக்கே உயிர்கொடுப்போர் !
கொஞ்சமில்லை நம்வீரம் ; கூடி நின்ருல்
குறுநரிகள் அரியேற்றை வெல்லப் போமோ ?
தஞ்சமென வந்தடியில் இரப்பா ராயின்
தரணிமுற்றுங் கொடுத்திடுவேம் ; எதிர்ப்பா ராயின்
மஞ்சனைநம் கணையுதிர்ப்பேம் ; போரிட்டே நம்
மானமதைக் காத்திடுவேம் ; மறவர் அன்ருே ? 45

விழிசிவந்து மொழித்தீயால் சுடர்வெடிக்க
விளம்பிநின்ற வேந்தர்மொழி, செவியிற் கேட்டார் ;
பழியின்றிப் புகழ்காக்கும் மரபில் வந்த
படைத்தலைவர் வீரப்பர் " ஆணை " என்ருர் !
" சுழித்தோடும் காலமெனும் ஆற்றில் நம்மைச்
சூழ்ந்திடுதீப் பகைவர்தமைச் சாய்ப்போம் " என்ருர் !
" அழிவின்றி ஆராய்ந்து திட்டம் தீட்டி
அரும்புகழைக் காப்போம் "என் றமைச்சர் சொன்ருர் ! 46

5. இளங்காதலர் சந்திப்பு

ஒளியப்பர் இல்லத்துத் தோட்டம் அஃது ;
ஒளிக்கதிரோன் வீழ்ந்திரண்டு நாழிகை போய்
ஒளித்தபிற கெங்கெங்கும் நிலவின் வெள்ளம்
ஓடிநிரம்பி யிருந்த நேரம் தன்னில்
விளிக்கின்ற சிற்றணில்கள் போலே நெஞ்சில்
விரைகின்ற காதலோடு அமைச்சர் பெற்ற
பளிக்குருவாம் கனிமொழியும் படைஞர் தம்முள்
பண்புடையா ளுந்தமிழ வேளும் நின்ருர் ! 47

' கண்ணே 'நம் களவுநெறி இன்பம் கண்டு
களிக்கின்ற வெண்ணிலவும் நகைத்தல் காண்நீ ;
மண்ணுகும் புறமொழிகள் மதிக்கா தேநீர்
மனக்கோயிற் குள்ளேநம் நேயம் காண்பாய் ;
தண்ணென்றே யினிக்குமுன்றன் மொழிகள் கேட்கத்
தவிக்குமடி என்னுள்ளம்' என்று ரைத்தே
உண்ணின்ற மகிழ்வினிக்கக் கோம்பன்னுளை
உவந்தணைத்தான் தமிழவேள் ஒன்றி நின்ருர் ! 48

(வளரும்)

கம்பராமாயணத்தில் பாட வேறுபாடுகள்

பேராசிரியர்,

கோ. சுப்பிரமணியப் பிள்ளை M. A., B. L.,

(மலர் 20, இதழ் 9, பக்கம் 510 இன் தொடர்ச்சி)

இனி, வேண்டுமென்றே மாற்றிய பாட வேறுபாடுகளை நோக்குவோம். பாலகாண்டம் திருவவதாரப்படலத்திற் கண்ட ஒரு வேறுபாடு நோக்கத்தக்கது. அரக்கர் கொடுமைக்கு ஆற்ருத அமரர்கள் முதலில் சிவனிடம் சென்று முறையிட்டனர் என்பதைக் குறித்த பாடல் வருமாறு :-

" சுடுதொழி லரக்கராற் ருேலைந்து வானுளோர்
கடுவமர் களனடி கலந்து கூறலும்
படுபொரு ளுணர்ந்தவப் பரமன் யாமினி
அடுவதில் லெனமறுத் தவரோ டேகினன் ".

இப்பாடல் பல ஏட்டுச்சுவடிகளிலும், அச்சுப் புத்தகங்களிலும் இவ்வாறே காணப்படுகிறது. தேவர்கள் முதலில் சிவனிடம் சென்று முறையிடுதற்குரிய காரணத்தை "கடுவமர்களன்" என்ற சொற்களால் கம்பன் நன்கு புலப்படுத்துகிருன். திருமால், பிரமன், இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களும் தோற்ருேடும்படி உலகையே வாரிவிழுங்கிய ஆலகால நஞ்சினைச் சிவன் வாரிவிழுங்கித் தேவர்களையும், யாவர்களையும் காத்தருளினுன் அல்லவா? அந்த ஆற்றலையும், முதன்மையையும், உதவியையும் எண்ணி நன்றியறிதலோடு தேவர்கள் சிவன் திருவடியை வணங்கி முறையிட்டனராம். "படுபொருளுணர்ந்தவப்பரமன்" என்று சிவனைக் கம்பன் சிறப்பிக்கிருன். ஆனல் ஈற்றடி, "அடுவதில்லென மறுத்தவரோடேகினன்" என்றிருக்கிறது. எங்கே ஏகினன் என்று இடத்தைச் சுட்டாமல், வெறுமனே ஏகினன் என்று கம்பன் பாடுவானு? ஏகின இடத்தை அடுத்த பாடல் நிகழ்ச்சிகொண்டு குறிப்பிற் பொருளுணரவைப்பது முறையா? அடுத்த பாடலில் சிவன் சென்று பிரமன் காலில் விழுந்து முறையிட்டான் என்று வந்துள்ளது. அவரோடேகிய

சிவன்மட்டுந்தான் பிரமன் காலில் விழுந்தானா? அவர் என்ற தேவர்கள் என்ன ஆனார்கள்? அவர்கள் பிரமன் காலில் விழவில்லையா? சிவன் சென்று அவ்வாறு முறையிடக் காரணமே இல்லை. இராவணனுக்கு நாளும் வாளும் கொடுத்து ஊற்றம்பெறச் செய்தவன் சிவன். இராவணன் ஒரு சிறந்த சிவபக்தன். அவனால் சிவனுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படவில்லை. சிவன் அவ்வாறு முறையிட்டிருக்கமுடியாது. கம்பன் இப்படிப் பாடமாட்டான். இங்குக் கிடைக்கக்கூடிய பாடவேறுபாடுகளையும் அச்சுப் புத்தகங்கள் காட்டவில்லை. ஆனால் இரண்டு பழமையான நல்ல நம்பத்தகுந்த ஏடுகளில் ஈற்றடி வேறுபாடம் கொண்டு திகழ்கிறது. "அடுகில மாயனோ டறைதி ரென்னவே" என்பதுவே பாடம். திருமாலினிடம் சென்று கூறுங்கள் என்று, மேல் நடக்கவிருப்பவற்றை யறிந்த சிவன் கூறினான் என்பது மிகப் பொருந்துவதாகும். இதனை யடுத்து ஒரு பாடல் அந்த இரண்டு சுவடிகளிலும் காணப் படுகிறது.

"கறைமிடற் றிறைசொலக் கடவு ளோர்களும்
மறைதெரி முனிவரும் வச்சி ராயுதத்
திறைவனும் வணங்கிநின் றெழுந்து போந்துயர்
நறைமல ரவனிட நண்ணன் மேயினார்"

இது கதைத் தொடர்ச்சிக்குப் பொருத்தமாக அமைந் துள்ளது. ஆனால் சிலர் இப்பாடலை வேண்டுமென்றே மறைத்து விட்டு 'அவரோ டேகினான்' என்று முன்பாட்டைத் திருத்தினார் கள். சிவனையும் தேவர்களோடு இழுத்துச்செல்லக் கருதியே பின்வந்தோர் இம்மாற்றத்தைச் செய்தனர். பின்வரும் பாடல் களில் இந்திரனைப்பற்றிய குறிப்பையெல்லாம் சிவமயமாக்கினர். பின்னர் திருமாலின் முன்னர் தேவர்கள் தாம் பிறக்கப்போகும் முறையைக் கூறவந்த இடத்து வாயு அநுமானாகப் பிறப்பேன் என்றான். பிறப்பேயில்லாத சிவனையும் திருமால் முன்கொண்டு நிறுத்திய இடைச்செருகற்காரர்களுக்குச் சிவனை என்னசெய்வது என்று தெரியவில்லை. ஆனால் அவனைச் சும்மாவிடலாமா? அவனையும் வாயு புகுந்த அநுமானுக்குள்ளேயே வைத்து அமுக்கிவிட்டார்கள். அச்சுப் புத்தகங்களில் அப்பாடல் வருமாறு :

"வாயுமற் றெனதுகூறு மாருதி யெனலு மற்றோர்
காயுமர்க் கடங்க ளாகிக் காசினி யதனின்மீது

போயிடத் து ணிந்தோ மென்றார் புராரிமற் றியானேவாத
சேயேனப் புகன்றான் மற்றைத் திசையுளோர்க் கவதி யுண்டோ ''

ஒருவனுக்குள்ளே இருவர் புகுந்தார் என்பது எங்குமில்லாத ஆச்சரியம் அல்லவா? இதனால் கம்பன் பாடலுக்குள்ளே ஒரு கோம்பனும் புகுந்திருக்கிறான் என்பது தெரியவரும். இப் பாடலின் உண்மையான பாடம் அவ்விரண்டு சுவடிகளிலும் வருமாறு :

" வாயுமற் றெனது கூறு மாருதி யெனலு மற்றோர்
காயுமற் கடங்க ளாகிக் காசினி யதனின் மீது
போயிடத் துணிந்தோ மென்றார் புயல்வண்ண னாதி வானோர்
மேயின ரென்னி லிந்த மேதினிக் கவதி யுண்டோ."

இங்கே சிவன் தேவர்களோடு பிரமனிடத்தும் திருமாலி னிடத்தும் சென்றானா? இல்லையா? என்பது கேள்வி. ' அருகில் மாயனோடு அறைதிர் என்னவே '' என்பது ஒரு பாடம். '' அடு கிலம் எனமறுத்து அவரோடு ஏகினான் ' என்பது ஒரு பாடம், இவற்றுக்கேற்பப் பின்னுள்ள இருபது பாடல்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றுள் எது உண்மையான பாடம்? கம்பன் எவ்வாறு பாடியிருப்பான் என்பதை நாம் கூர்ந்து ஆராயவேண் டும். இரண்டு ஏடுகளில் மட்டுமே சிவன் ஏகவில்லை என்று காணப்படுகிறது. மற்ற எல்லா ஏடுகளிலும் சிவன் ஏகினான் என்றே உள்ளது.

இது சில ஏடு எழுதுவோர் செய்த மாற்றமேயாகும். அதற் கேற்ற பாடங்கள் சிவனைத் திருமாலின்முன் விழுந்து பணிந்து எழுந்துநின்று குறைபடும்படியாகச் செய்து, அம்முறையால் திருமாலுக்கு ஓர் ஏற்றம் கற்பிப்பதற்காகப் புகுத்தப்பட்டவை யாகவும், சைவமக்களின் மனங்களைப் புண்படுத்துபவையாகவும் தெரிகின்றன. இது கம்பனுடைய கொள்கைக்கு ஒவ்வாத தொன்று. திருமாலுக்கு இயல்பாகவே உள்ள சிறப்பு என்றும் அழியாதது. அதற்காக இத்தகைய வேண்டாத வழிகளை ஒரு சிலர் கையாண்டிருப்பது வருந்தத்தக்கது. சிவபெருமானைக் குறைப்படுத்தித்தான் திருமாலுக்கு ஏற்றம் ஊட்டவேண்டும் என்பதில்லை. இத்தகைய கட்டங்களில் நாம் காய்தல் உவத்தல் இன்றி உண்மையைக் காணவேண்டும். கம்பனுடைய கருத் தையும் போக்கையும் நாம் காவியம் முழுதிலும் தொடர்ந்து

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

வெள்ளத்தால் அவதியுற்றேருக்கு உணவு அளித்தல்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில்
வெள்ளத்தால் அவதியுற்றோர் உணவு பெறுதல்.

சென்று காணும்போது, எந்தச் சமயத்தையும் எந்தக் கடவுளை யும் எவ்விதத்திலும் இழிவுபடுத்தவேண்டும் என்பது அவன் எண்ணமாகத் தோன்றவில்லை. பல சமயங்களினுடைய ஒருமை யையும் பொதுமையையும் அவன் ஆங்காங்கு எடுத்துக்கூறத் தயங்கியதில்லை. '' அரனதிகன் உலகளந்த அரியதிகன் என் றுரைக்கும் அறிவிலார்க்குப் பரகதி சென்றடைவரிய பரிசே போல் '' என்று கிட்கிந்தாகாண்டம் நாடவிட்ட படலத்தில் சிறப்பாகப் பாடிய கவிஞன், இவ்வாறு சிவனைக் குறைவுறப் புகுத்திப் பாடியிருக்கமாட்டான் என்பது திண்ணம். மேலும், இராமனைத் திருமாலின் அவதாரம் என்று கொள்ளாமல் ''சூலமுந் திகிரிசங்குங் கரகமுந் துறந்துதொல்லை, ஆலமுமலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான் '' என்று மூவரின் அவதாரமாகவே முழங்கி மகிழ்கின்றான். மற்றும், கம்பன் சிவனிடத்தில் அதிகப் பற்றும் மதிப்பும் கொண்டவன் என்பதற்கும், சிவனுடைய இயல்புகளை நன்கு விரிவாக உணர்ந் திருந்தான் என்பதற்கும் சான்றாக நூற்றுக்கணக்கான குறிப்புக் களை இராமாவதார நூலிற் காணலாம். மேலும் அஞ்சிலே ஒன்று பெற்றானுகிய அநுமனை வாதசேய் காற்றின்மைந்தன் என்று கூறுவதுபோல், சிவன்சேய் என்றோ, சிவன் அம்சம் என்றோ, சிவன்கூறு என்றோ நூலில் வேறு எங்கும் கூறப்பட வில்லை. இதிலிருந்தே மேலே குறித்த மாற்றங்கள் அதிகமான ஏடுகளிற் காணப்பட்டாலும், அவை இடைச்செருகல் என்பது நன்கு தெரியவரும்.

வான்மீகத்திலும் இதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடை யாது. அங்கு ஏகாதசருத்திரரைக் குறித்துள்ளனரேதவிர சிவன் திருமாலிடம் சென்றதாகவாவது, குறையிரந்ததாகவாவது அநுமனாகப்பிறந்ததாகவாவது யாதொரு குறிப்பும் கிடையாது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட இராமாவதாரப் பதிப்பில்தான் இவ்வுண்மைகள் முதன்முதலாகக் கண்டு உலகிற்கு வெளியிடப்பட்டன. இவைபோல் ஆயிரக்கணக்கான திருந்திய நல்ல உண்மையான கம்பன் பாடங்கள் இன்னும் நமக்குக் கிடைக்கவிருக்கின்றன.

மறதிக்கு மன்னன்

தஞ்சைவாணன், துரை. சீனிவாசகம்

'ஆங்கிலேயர் ஒருவர்; பேராசிரியப் பணியிலிருந்தார். அவர் பேரறிஞரும் கூட! எல்லா வகையிலும் நிறைவு பெற்றிருந்த அவரை மட்டில்லா மறதி ஆட்கொண்டிருந்தது. அவரது மனைவியும் பெருமை மிக்கவள்; இல்லாளுக்குரிய இலக்கணம் அமையப்பெற்றவள். இவர்களுக்கு ஒரே மகன்; நல்ல அழகன்; குணத்தன். மகனுக்குப் பெண் தேடி அந்த ஆங்கிலேயரும் அவர் மனைவியும் புறப்பட்டனர். அழகும் குணமும் உள்ளவளைத் தேடித் தேடிக் கடைசியில் ஒரு வீட்டை யடைந்தனர். அந்த வீட்டுப் பெண் நல்லவளாகவும், அழகி யாகவும் அந்த ஆங்கிலேயர் மனைவிக்குத் தோன்றினாள்.

ஆங்கிலேயரோ அந்தப் பெண்ணை நெடுநேரம் பார்த்து வெறுப்போடு வெளிநடந்தார். அவர் மனைவி தொடர்ந்தோடி "இவள் நம் மகனுக்குப் பொருத்தம்தானே!" என்றாள். "இவளையா? அழகில்லையே!" என்றார் அவர். தேடி யலுத்த வெறுப்பாலும், மகனது மணத்தை முடிக்கவேண்டு மென்ற விருப்பாலும், உண்மையிலேயே அந்தப் பெண்ணின் உருவம் காட்டிய வனப்பாலும் உந்தப்பட்ட அந்த ஆங்கிலேய மாது தன் கணவரிடத்தில் "உங்கள் மனைவியின் அழகுக்கு இவள் அழகு போதும்!" என்றாள். அதே வினாடியில் அந்த ஆங்கிலேயர் சொல்பவள் தன் மனைவி என்பதையும் மறந்து அவள் கன்னத்தில் 'பளீர்' என அடித்து, "நீ என்னை எது கூறினாலும் பொறுப்பேன்; ஆனால் என் மனைவியைப் பழித்தால் உன் உயிர் உன்னிடம் இராது" என்று உறுமினார்.

இதன்கண்ணுள்ள நகைச்சுவை என்னை மிகவும் கவர்ந்த தால் கீழே காணும் கவிதை உருவெடுத்தது; படித்து நகைச் சுவை கிடைக்கிறதா என்று பாருங்கள்.

(1) திறமைக்கும் தெளிவுக்கும்
தேன்போன்ற நடத்தைக்கும்
பிறவாத பேராளன் ;
ஆசிரியன் ; பெரிதான
உறவுக்குத் தாய்போல்வான் ;
ஒப்பில்லான், ஆங்கிலேயன் ;
மறதிக்கு மட்டுமிவன்
மாமன்னன் ; மற்றதில்லை !

(2) முத்துக்குத் தக்கவொளி
வீச்சுப்போல் முன்னவற்குப்
பத்துக்கு மேலான
பொருத்தத்தாள் ; பாவைநல்லாள் ;
வித்துக்குள் இருக்குமொரு
விளக்கம்போல் பண்புடையாள் ;
தித்திக்கும் பெருங்குணத்தாள்,
சிறந்தபெரும் மனையறத்தாள் !

(3) தித்திப்பும் தித்திப்பும்
இரண்டுமொன்ருய்ச் சேர்ந்துவிட்டால்
தித்திக்கும் பேரினிமை
என்பதுண்மை ; ஆதலினுல்,
புத்திக்கும் எழிலுக்கும்
புகழுக்கும் வந்தவனுய்
எத்திக்கும் மெச்சுகாளை
இவர்கட்கு மகனுனுன்.

(4) வண்ணத்தில் எண்ணத்தில்
வடிவழகில் நல்லதொரு
பெண்ணுகப் பார்க்கவிந்தப்
பெற்ருேர்கள் மகனுக்காய்
கிண்ணத்தில் வெண்ணெயெனக்
கிழமைபூண்டு, சென்றெங்கும்
எண்ணுத பேரெழிலில்
இருந்தவளைக் கண்டார்கள்.

(5) தந்தையந்த ஆசிரியன்,
தாம்பார்த்தான் தங்கமதை ;
சிந்தைமகிழ்ந் திருந்தமனை
சிலையானுள் வேற்றிகண்டு ;
விந்தையந்த மனிதனுடன்
வேறிச்சென்ன எழுந்தேட்ட,
நிந்தையிது என்றவளும்
நிழலைப்போல் தொடர்ந்துகேட்கும்

(6) " பெண்ணுமக்குப் பிடித்தந்தான்,
இல்லையாநீர் பேசு "மென்றாள்
" கண்ணழகைப் போலவோரு
கருத்தமேனிக் காரிகையா ?
மண்ணகலழகன்நம்
மகனுக்கா ? ஆ ! இவளைப்
பண்ணகத்து வாழ்வளிக்கப்
பார்த்தேடுத்தல் பாவமன்றோ ! "

(7) " என்னசோன்னீர், கருத்தவளா ?
எழிலினைநீர் என்னகண்டீர் ?
பன்னுமுங்கள் மனைவியேழிற்
கிவளேந்தப் பான்மைகேட்டாள் ? "
சோன்னவந்தச் சோல்லருமுன்
மறதிமன்னன் சுடுகையாலே
கன்னத்தைப் பதம்பார்த்தேன்
மனைபழித்தால் காலனாகும் !

(8) கேட்டாய்நீ எனச்சோல்க
கேட்டிடுவேன் ; மற்றுமேன்னைத்
திட்டாத படியேல்லாம்
திட்டிடுவாய் சினங்கோள்ளேன் ;
கட்டாக மனைவிதனை,
அவள்எழிலைக் குறைக்கவோர்சோல்
தோட்டாலும் விடமாட்டேன்
துண்டுசெய்வேன் நா "வேன்றான் !

திருக்களிற்றுப்படியார்

பண்டித, வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

(மலர் 20, இதழ் 9, பக்கம் 518 இன் தொடர்ச்சி)

உவமையும் பொருளும்:

1. ஆர்த்த கடல் தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடாது. அதனை மேகம் தடிந்து, தான் பொழியுமாயின் யாவரும் அதனை உண்ணலாம். அதுபோலச் சாத்திரங்களை நேரே படித்துப் பயன்பெறலாகாது. குருமுகமாகக் கேட்டல் வேண்டும். [பாடல் - 6]

2. உலகின் கழிவுப் பொருள்களாகிய மலங்கள் அனைத்தும் பசுவின் மலத்தாலேயே போக்கப்படுகின்றன. அதுபோல உருவுடைய ஞானகுருவே உயிர்களின் உருவத்தை (பிறப்பை) மாய்க்க வல்லவன் [பாடல் - 7]

3. கடலிற் பாய்ந்த ஆற்றுநீர் மீள மறிப்பினும் கடலின் தன்மையாம் உவர்ப்புத் தோன்ற விளங்குமேயன்றி நன்னீராகாது. அதுபோல சிவனோடொன்றாகிய சிவயோகியர்களுக்குத் தம் கரணங்கள் ஒருவாற்றான் மறித்து உலகியற் பொருள்களிற் செல்லினும் சிவகரணமாகவே இருப்பதல்லது அவகரணமாகா. [பாடல் - 11]

4. இன்ப துன்பங்களிலே அலைப்புண்ட ஒருவருக்கு ஓராற்றான் தூக்கம்வர அவரை நல்ல படுக்கையிலும் படுக்க வைத்தால் அவர் நன்றாக உறங்கிவிடுவர். அதுபோல முற்றவத்தால் இயல்பாகவே அன்புமிகவுண்டாய் அதிலே விவேகமுண்டாய்த் துன்ப வினையைத் துடைப்பதுண்டாய் இன்பந்தரும் பூரணர்க்கே தாகமுண்டாய் இருக்கின்றவர்களுக்குக் குருவருளும் கிடைப்பின் எல்லாச் சிறப்புக்களையும் மேன்மேலும் பெறுவர். [பாடல் - 13]

5. பயிரிடும் புலமும் போரிடும் புலமும் ஓரிடத்திருப்பின் உழவனே மழவனும் (வீரன்) ஆகுவன். அதுபோல, செய்கின்ற செயல்கள் எல்லாம் சிவன் செயலே என்று செய்யின் மலமாயை தன்னோடு வல்வினையின்றாய் முத்திப் பெருவாழ்வை அடைய லாம்.

6. மணியின் நாக்கு அசைவுடையதேனும் நிலத்தில் வைத்துவிடின் அதன் அசைவு நின்றுவிடும். அதுபோல யோகியர் தம் சிந்தனையைத் திருவடி ஞானத்திலேயே வைத் திருப்பதால் அவர்களின் மனம் அலைவுறாது. [பாடல் - 32]

7. அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையோடு தங்கி யின்புறுதற்கேதுவான ஆலமரமும், சிறுமீன் சினையினும் நுண்ணிதாகிய விதையில் அடங்கி நிற்பதைக் காணலாம். அதுபோலக் கண்ணும் கருத்தும் கடந்த கடவுளும், யோகியர் தம் உள்ளத்தே நிலைபெறுவார். [பாடல் - 48]

8. நெல்முளை முதலியன அவ்வவற்றின் வித்தினின்றுமே முளைக்கின்றன. வித்துக்களின்றி முளையில்லை. அதுபோலச் சிவ மாம் வித்தின்றி அருளாகியமுளையில்லை. வித்தும் முளையும் வேறு அல்லாததுபோலச் சிவமும் அருளும் வேறல்ல. [பாடல் - 57]

"வித்தினில் அன்றி முளையில்லை; அம்முளை
வித்தினில் அன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனன்றி வேறில்லை
அத்தன்மை ஆகும் அரன்நெறி காணுமே"

என்னும் திருமூலர் திருமந்திரமும் காண்க.

9. மன்னன் தன்கீழ் வாழ்வார்களை ஒருபடித்தாய்க் காக் கும் இயல்புடையவனே. எனினும் நெறி தவறாதவர்களுக்கு நன்மையும் தவறியவர்களுக்குத் தண்டமும் செய்வன். அதனைப் போன்றே இறைவனும் அனைத்துயிர்களுக்கும் அருள் செய்வ தில் ஒருபடித்தாக விளங்குபவன் எனினும் பக்குவமுடையார்க்கு நன்மையும் பக்குவமின்றி நெறியின் நீங்கி வாழ்வோர்க்குத் தண்டமும் அளிப்பன். 'ஆணையால் அவனிமன்னன்'' எனத் தொடங்கும் சிவஞான சித்தியாரும் இவ்வுவமையையே பின் பற்றி விளக்கும். [பாடல் - 75]

10. திருப்பாற்கடலில் தோன்றிய அமுதம் கண்டவர்க்குப் பயன் அளிக்கவில்லை. அதனை உண்டவர்களே அமரர் ஆயினர். அது போலச் சத்தி தன் வடிவமாய் ஞானத்தைக் கண்டதும் அமைவு கொள்ளாது. அதனுடன் இயைந்து நிற்கும் சிவத்தைக் கண்டு அதனுள் அழுந்துவதே முத்தியாகும்.

"தாயுடன் (சக்தி) சென்று பின் தாதையைக் (சிவத்தை) கூடி ஏயுமதே நிட்டை" எனவரும் அருள்மொழியும் "வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்பித் தேறினர்கள் என்றுந் தீபற" என்னும் திருவுந்தியாரும் இதனுண்மையை விளக்கும். [பாடல் 77]

11. நமது கையினாலேயே நாம் எல்லாத் தொழில்களையும் செய்கின்றோம். அதுபோல இறைவனும் தன் அருட்சத்தியாலேயே எல்லாத் தொழில்களையும் செய்கின்றான்.

"மருளினை அருளால் (சத்தியால்) வாட்டி மன்னுயிர்க் களிப்பன்
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்"

எனவரும் சிவஞான சித்தியாரும் இவ்வுண்மையை இனிது விளக்குதல் காண்க. [பாடல் - 78]

12. பொன் கட்டியாக இருக்கும் பொழுதும் அணியாக மாறும்பொழுதும் அதன் நிறம் மாறுவதில்லை. அவ்வப் பொருள்களோடும் ஒன்றியே நிற்கிறது. அதைப்போல இறைவனும் தன்நிலையில் இருக்கும் பொழுதும், நவந்தரு பேதங்களாக நாடகம் நடிக்கும்பொழுதும் எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நின்றே இயைந்திருக்கின்றாள் என்பதாம்.

13. நம் வயிற்றிலும் குருதியிலும் இருக்கும் புழுக்கள் நெளிந்தும் உண்டும் உறங்கியும் வாழ்கின்றன. அவ்வப் பொழுது இன்பதுன்பங்களும் அவற்றிற்கு உண்டாகின்றன. அவற்றை நாம் அடைவதில்லை. அதைப்போல உயிர்கள் அனைத்தும் இறைவனின் உடைமையாயினும் உயிர்கள் படும் இன்ப துன்பங்களை இறைவன் அடைவதில்லை. [பாடல் - 87]

14. கடலில் புக்கு நீராடும் வல்லமையிருப்பினும் அதன் அகல நீளத்தை அறிய இயலாதவாறு போல முன்னைய தவத்

தால் குருவின் திருமேனிகண்டு அவனருள் பெறினும் அக்குருவின் பெருமையை முற்றிலும் அறியலாகாது. [பாடல் - 89]

15. கடலின் நீர் உப்புத்தன்மையுடையது. அது உப்பாக உருவம் கோள்ளும்போழுதே அதனே அறிகின்ருேம். அதைப் போல சிவத்துள் அடங்கியிருக்கும் அருளைக் குருவாக எழுந்தருளும் நிலையிலேயே காண முடியும். [பாடல் - 91]

16. பூமியின்கண்ணே தோன்றிய மரம் பயன்கோடுக்குமேயன்றி மரத்தின்கண்ணே தோன்றிய புல்லூரி எவ்விதப் பயனும் கோடுக்காது. அதைப்போல இறைவனே அருட்டிருமேனி கோண்டு எழுந்தருளிவந்து ஆன்மாக்களுக்கு ஞானத்தைக் கோடுக்க இயலுமேயல்லாது, தன்னை யறியாது தலைவன் தனை யறியாது முன்னை வினையின் முடிவறியாது குருக்கள் என்று பேரிட்டுக்கோள்ளும் ஏனையோர் ஆன்மாக்களுக்குப் பயன்தர வல்லரல்லர். [பாடல் - 92]

17. படிகம் தன்னிறம் காட்டாது சார்ந்ததன் நிறத்தைக் காட்டுதல்போல ஆன்மாவும் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும். [பாடல் - 97]

இந்நூலிலிருந்து அறியப்படும் அடியார்களும் அவர்தம் வரலாற்றுக் குறிப்புக்களும்:—

1. திருஞானசம்பந்தர்:-

    1. பாலை நேய்தல் பாடியது. [பாடல் 12, 70]
    2. ஞானப்பாலை உமையளித்தாள் எனக் கேட்டதும் மங்கையர்க்கரசியாருக்குப் பால் சுரந்தது. [பாடல் 54]
    3. எலும்பைப் பெண்ணுக்கியது. [பாடல் 65, 70]
    4. முள்ளிவாய்க் கரையினின்றும் ஆற்றுப்பெருக்கிலே கோல்இன்றி ஒடம் செலுத்தித் திருக்கோள்ளம்பூதூர் எய்தியது.
    5. திருப்பட்டீச்சரத்தில் முத்துச் சிவிகை பெற்றது.
    6. திருவாவடுதுறையில் உலவாக்கிழி பெற்றது.
    7. திருமறைக்காட்டில் திருக்கதவம் அடைக்கப் பாடியது.

8. திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனை ஆக்கியது.
9. திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றது.
10. வைகையில் ஏடெதிர் செலுத்தியது.
11. பாண்டியனுக்கு வெப்புநோய் தீர்த்தது.
12. திருமயிலையில் என்பு பெண்ணாக்கியது.

2. திருநாவுக்கரசர்:-

1. அப்பூதியடிகள் மகனுக்குப் பாம்பு விஷம் நீங்க அருளியது.
2. பல்லவன் ஏவலால் விளைந்த யானை, நீற்றறை, விஷம், கல்தூணைப் பூட்டிக் கடலிற் பாய்ச்சல் ஆகிய துன்பங்களினின்றும் பிழைத்தது.
3. திருமறைக்காட்டில் திருக்கதவம் திறப்பித்தது.

3. சுந்தரர்:-

1. முதலை வாயினின்றும் பிள்ளையை அழைத்தது. [12]
2. இறைவனைத் தூதாக அனுப்பியது [70]

4. மணிவாசகர்:-

1. மணிவாசகர் பொருட்டு இறைவன் குதிரைச் சேவகனாகியது.
2. திருப்பெருந்துறையில் குருவருளைப்பெற்ற பேரின்பப் பெருக்கைத் திருவாசகமாக அருளியது. [70]

5. சிறுத்தொண்டர்:-

பிள்ளையைக் கறியாகச் சமைத்தது. [18]

6. சண்டிகேசுவரர்:-

தாதையை வாளால் தடிந்தது. [19]

7. அறிவாட்டாயர்:-

கமரிடை நிவேதனம் சிந்த ஊட்டியறுத்தருளியது.
[150]

8. திருக்குறிப்புத்தொண்டர்:-

ஆடையை அடியார்க்குக் குறித்த காலத்தில் கொடுக்க இயலாமையால் கல்லில் முட்டிக்கொண்டது.

9. ஏயர்கோன் கலிக்காமர்:-

இறைவனைத் தூதுவிட்ட அடியாரைக் காண்டலே பிழையென நினைத்து வாளால் மாய்ந்தருளியது. [50]

10. மூர்த்தியார்:-

சந்தனத் திருத்தொண்டு சமணரால் முட்டுப்படத் தமது கையையே உறைத்தது [50]

11. மூர்க்கர்:-

சூதாடியும் சிவனடியார்க்கருளியது. [50]

12. கண்ணப்பர்:-

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை எனல். [52]

13. சேந்தனுர்:-

அவிழ்ந்த மனத்தால் அவிழ்த்து அமுது செய்வித்தது அரனடிக் கன்புசெய்த இவர்களேயன்றி அரனடிக் கன்பிலாது செய்த அறமும் பாவமாகும் என்பதற்குத் தக்கனுரை 63வது பாடலில் குறிப்பிடுகின்ருர்.

முன்னோர் மொழிபொருளேயன்றி அவர்மொழியும் பொன்னே போல் போற்றிக்கொள்ளும் ஆசிரியர்தம் அருமை அறிந்து மகிழ்தற்குரியது. திருவுந்தியாரின் சொல்லேயும் பொருளேயும் பலவேறிடங்களிலும் எடுத்தாண்டுள்ளார். எடுத்துக்காட்டாக முன்னமே கூறப்பட்டுள்ளது. அடுத்துத் திருக்குறளேயும் திருவாசகத்தையும் நான்கு இடங்களில் எடுத்தாண்டுள்ளார்.

எடுத்தாண்ட திருக்குறள்கள் இரண்டு:-

1. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்

2. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

இவ்விரு குறட்களையும் முறையே 34, 40ம் திருக்களிற்றுப் படியார் திருப்பாடலில் காணலாம்.

எடுத்தாண்ட திருவாசக அடிகள் இரண்டு:-

1. கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்.
திருக்கோத்தும்பி - 4.

2. சிவன் என யானும் தேறினன் காண்க.
திருவண்டப்பகுதி - அடி 62.

இவற்றை முறையே 52, 91ம் திருக்களிற்றுப்படியார் திருப் பாடல்களில் காணலாம்.

இன்னும் இந்நூலினமைத்துக் காணும் நுட்பங்களும் ஒப்புமைப் பகுதிகளும் பலவாகும். 'என்னறிவு சென்றளவில் யான் இன்றறிந்தபடி' என்புழிப் போல அடியனின் கட்டுரையும் இவ்வளவில் நிறைவு பெறுகின்றது.

க. உமாமகேஸ்வரன்

இராகம் - மார்க்கஹிந்தோளம்] [தாளம் - ஆதி

பல்லவி

வடி வேலவா வள்ளி மணவாளா (வடி)

அனுபல்லவி

அடி தொழுதேன் அரன்மகனே - நின் - தோல்
ஆரணப் பொருளே வாரணன் தம்பியே (வடி)

சரணம்

நிதிவலைப் பட்டு நீதிநெறி வீட்டு
மதியழிந் திட்டு மானமதுங் கெட்டு
விதியெனுந் தீயால் வெதும்புவேற் குன்றன்
கதி யருள்வாய் கதிர்காமத் தேன்றன். (வடி)

திருவுந்தியார்

திரு. த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை,

மேய்கண்டசாத்திரங்களில் முதலாவதாகவைத்து எண்ணப் படுவது திருவுந்தியார். திருவுந்தியார் ஓர் அநுபவநூல். சிவாக மங்களில் அருளிச்சேய்யப்பட்ட ஞானபாதப்போருளை அநுபூதி நிலையில் தேள்ளத்தேளிய விளக்குவது இந்நூல். இதனைத் தமிழுலகுக்கு அருளியவர்கள் திருவியலூர் - உய்யவந்ததேவ நாயனுர். இவர் மாணவரே திருக்கடவூர் - உய்யவந்ததேவ நாயனுர் ; இவ் உய்யவந்ததேவ நாயனுர் மாணவரின் மாணவர் என்பது ஒருசாரார்கோள்கை. எங்ஙனமாயினும், திருவுந்தியாரில் கூறப்பட்டபோருளை நூறு வேண்பாக்களால் விரிவாக விளக்கப் பட்டுள்ளமை காணலாம்.

இந்நூல் பதிபசுபாசங்களின் சோருப இயல்புகளையேல்லாம் தோகுத்துணர்த்துவது. முதல் திருப்பாட்டில் கடவுள் இயல் கூறப்படுகிறது. அக்கடவுள் அநாதியேநிர்மலமானது, அறிதற்கரி யது, பரிபூரணமானது; அது பேரும்போருள். அப்பேரும்போருள் ஆன்மாக்களாகிய நம்போருட்டால் ஒரு திருமேனிகோண்டருளி யது. அத்திருமேனி தூயது. அருட்டிருமேனியாம் அதுவே குருதிருமேனி. குருதிருமேனிகோண்ட அப்பரம்போருள் தீட்சை யினுல் சஞ்சிதத்தை ஒழிப்பது. சஞ்சிதம் - அநாதிகாலம் தோட்டுவந்த வினைமுட்டை. எடுத்த உடம்பிலே பிராரத்தத்தைப் புசிக்கச்சேய்வது, பிராரத்தம் புசிக்கும்காலத்திலே அதில் அழுந் தாதபடியையும் காட்டுவது, ஆகாமியம் ஏருதபடி உபதேச மோழியால் நிலைநிறுத்துவது. மாயாபடலத்தையும் உரிப்பது. மூலமலம் என்னும் ஆணவக்கட்டினின்றும் விடுவிப்பது. ஆணவம் விலங்குபோல்வது. அருளமுதத்தைப் புசிப்பிப்பது. திருவடியிலே கூட்டி இரண்டற நிற்பிப்பது. இப்படிச்சேய்யும் உபகாரத்தை என்றேன்றும் மறவாமல் சிவானந்த அநுபூதியில் திளைத்திருத்தலோன்றே ஆன்மாவின் கடப்பாடாம் என்க.

இனி பிறவிக்குருடனான ஒருவன் திருவருளால் கண் பெற்றான். பலகாலம் கண்தெரியாமலிருந்தவன் திடீரென்று விழித்தகாலத்திலே பழையவாசனையால் வழியைக் குழியென்றும் குழியை வழியென்றும் எதிரில் வந்தவரை யாரெனக் கேட்டும் மயங்கியேநிற்பான். அதுபோல குருவருள் பெற்ற காலத்தும் பிராரத்தவுடம்புடன் கூடியிருத்தலினால் இந்திரியங்களுடன் கூடிய பழக்க வழக்கங்கள் விடுதற்கு அருமையாயுள்ளன. ஆயினும் பிராரத்தம் புசிக்கும்போதே திருவருளே கண்ணாகக் கொண்டு ஆன்மா அதில் அழுந்தாமல் அநுபவித்துத் தொலைக்க வேண்டும். அழுந்தின் அது பிறவிக்கு வித்தாம். பொய்ப் பொருளாகிய பிரபஞ்சத்தில் அழுந்தாமல் மெய்ப்பொருளாகிய பரம்பொருளின் அருட்குணங்களில் அழுந்திச் சிந்தித்திருத்தல் வேண்டும். அதுவே பிறப்பிறப்புக்களை நீக்குதற்குரிய வழியாம் என்க.

பரிபூரணமான பரம்பொருள் குருதிருமேனி கொண்டுவந்து அருளிய அருளுபதேசத்தால் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்னும் மூவினைகளையும் போக்கியவர்கள் ஆசாரியனையே பற்றுக்கோடாகக்கொண்டு 'குருவே சிவ'மெனத் தேறி வழி படுதல் வேண்டும். அவ்வாறு வழிபட்டுநிற்போருக்கு எக்கா லத்தும் பிறப்பிறப்புக்கள் இல்லையாம் என்க. இதனையே திருமூல தேவர்,

"திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடிவிற் கண்ட கோனையெங் கோவைக்
கருவழி வாற்றிடக் கண்டுகொண் டேனே"

என்றருளினார்.

ஆன்மாவின் நிலையையும் சிவசொரூப நிலையையும் சிவ ஞானமே கண்ணாகக்கொண்டு அறிந்து சிவாநுபூதியில் உறைத்து நின்ற அநுபவநிலையினை வாக்கினால் உரைக்கவொண்ணாது. அநுபவித்தலொன்றே அமையும். மனம் வாக்குக் காயங்கள் மாயாசம்பந்தமுடையன. மாயையைக் கடந்துநின்ற பரம் பொருள் உவமித்துச் சொல்லவாராது. பரமசுகத்தில் அழுந்தி நின்றது எப்படி என்னில் அப்படித்தான் என்பதன்றி எடுத்துச் சொல்லுதற்கில்லை. சிவஞானத்தால் அறிந்து அநுபவிக்கும்

சிவானுபூதி ஆன்மஞானத்தால் அறியமுடியாததாம் என்க. இதனை,

> " இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்
> பதிவித்த பாதப் பராபரன் நந்தி
> கதிவைத்த வாறும் மெய்காட் டியவாறும்
> விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே "

என்றருளினார் திருமூலர்.

உயிருக்குயிராய்நிற்றலால் ஒன்று என்னும்படியாய், அவன் அவள் அது எனப் பகுத்துப் பலவாய்ச் சுட்டியுணரப்படுதலின் பல என்னும்படியாய்நின்ற அப்பரம்பொருளே ஆசாரியனுமாயினான். குருவடிவாய்நின்று அநாதிகாலம் தொடங்கி இன்றளவும் திருவருள் கிடையாமல் பிறப்பிறப்புக்களில் பட்டுச் சுழன்ற நம்மையுந் தமது பேரருட்டிறத்தால் திருவடி தந்து அடிமையாகக் கொண்டருளினான் எனவே அக்குருவின் பேரருள் சிந்தித் திருத்தலன்றிச் சொல்லவொண்ணாது என்க. கன்மபரிபாகமும் மலபரிபாகமும் பிறந்தாலன்றிக் குருவாய்வந்து அநுக்கிரகித்தல் இல்லை எனக் குறிப்பித்தபடி.

யான் செய்தேன் பிறர் செய்தார் என்னும் மலவலியையும் ஆன்மசுபாவத்தையும் அருளினால்விட்டு நீங்கி, விட்டுநீங்கினோம் என்னும் தன்னையும் அருளிலே கொடுத்துத் தானும் அவ்வருளிலே அழுந்தாமல் அருளினையுடைய முதல்வனிடத்து அழுந்திநிற்றல் கூடுமாயின் அப்பொழுதே முதல்வனும் இவனைத் தன்னடியான் என்று ஏன்றுகொள்வான். இவன் செயலெல்லாம் தன்செயலென்றே கொள்வான். ஆன்மபோதத்தைத் தான் பெற்றுச் சிவபோதத்தை அருளுவான் என்க. " என்னுடைய செயல் மாண்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ " எனவும், " நான் கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ " எனவும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளியமை இக்கருத்துப்பற்றியே என அறிக. " என்னைத் தன்னடியான் என்று அறிதலும், தன்னை நானும் பிரானெனன் றறிந்தேனே " எனவரும் திருவாக்குக்களானும் உணர்க.

மாதர்கள் தங்கணவரிடத்து வைத்துள்ள தலையன்பு காரணமாக உள்ளம் உருகிநிற்பர். அதைப்போல, ஆன்மாக்கள் தம் பொருட்டுத் திருமேனி தாங்கி வந்தருளிய திருவைந்தெழுத்தை உபதேசிக்கக் கேட்டும், பஞ்சாக்கரமே திருமேனியாகவுள்ள

முறைமை காட்டக்கண்டும் அந்தச் சோருபம் தம்மிடத்தே கூடிநிற்பதை யுணர்த்த உணர்ந்தும் தீயிடையிட்ட மெழுகு போல உருகிப் பேரன்பு கூர்வர், கரையழிந்து அவசமாவர். தரிசனவேதி பரிசவேதிகளால் களிம்பறப் பேதிக்கப்பட்ட செம்பு மாற்றுயர்ந்து செம்பு என்னும் பேர்கெட்டுப் பொன் என்ற பேர் பெற்றூர்போல ஆன்ம சோருபம் கெட்டுச் சிவமாந்தன்மை பெற்று நிற்பர் இவ்வாறன்றி, ஆன்மபோதத்தால் ஆராய்ந்து கண்டு கூடுதற்கரிய அப்பரம்பொருளைச் சிவஞானத்தால் அறிந்து கூடியவர்களே மேலான செல்வம் பெற்ரோராவார்.

இனி இவ்வாறு சிவஞானத்தால் பெறும்நிலை கூடாதாயின் ஆதாரங்களையும் அதிதேய்வங்களையும் அறிந்து அபிமுகம் பண்ணிக் கைவந்தபின் நிராதாரயோகத்தால் ஆன்மசோருபம் உணர்ந்து, பற்ருென்றுமின்றி சமாதிகூடித் தன் செயலற நின்று சிவசோருபத்திலே கூடக்கடவர். மீதானமே சிவ சோருபம். அவ்விடமே நின்மலராகிய சிவத்தைக் கூடுமிடமாம்.

ஆன்ம போதத்தாலே ஆதாரங்களிலே மூர்த்திகளைத் தியானிக்கின் அம்மூர்த்திகள் போகத்துக்கு ஏதுவாகிய பதங் களையே கொடுப்பன. அஃதன்றி பரிபூரணமான சாயுச்சியத்தை அடைவிக்கமாட்டா. ஆன்மபோதத்தால் தியானிப்பவை மாயா வடிவங்களே ; சிவசோருபமன்று ஆகலின் மன வாக்குக் காயங்களுக்குஎட்டாத அப்பரம்பொருள் நம்முடைய கற்பனைக்கு எட்டாது என்க.

ஆன்மா உடம்பைக் கூடிஞலொழியச் செயற்படாது' உடம்பு ஐம்பெரும் பூதங்களின் கூட்டுறவு. இதனை உள்ளபடி விசாரித்தறிந்து நீங்கி நிற்கப்பெறின் பிரமாண்டமாகிய ஐம் பூதங்களைப்போலவே வேரும். இதனை அருட்கண்ணுல் கண்டு நீங்கின ஆன்மாவுக்கு நீங்கின அப்பொழுதே ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகள் ஒழியும். உயிர்க்குயிராய் மறைந்து நின்றருளிய சிவனும் இவனைத் தனதாக்கிக்கொண்டு தானே ஆன்மாவாய் நிற்பன். இந்நிலை தவருமல் இதற்கு மாறுபட்ட மயக்க விகற்பவழிகளில் செல்லாமல் பாதுகாக்கவேண்டும். அவ்வழிகளெல்லாம் பிறப்பு இறப்புக்களில் கொண்டு சேர்ப்பன. திருவருளே கண்ணுகக்கொண்டு கேவல சகலத்திலே தாக்குரு மல் நிற்கவேண்டும். இவ்வழியே வேதசிவாகமங்களில் கூறும் முடிபாம்.

(தொடரும்)

ஆவணிமூலத் திருநாள்

திரு. மு இராஜகோபாலன்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்தில் ஆவணிமூலத் திருநாள் 22—8—61 இல் நடைபெற்றது. ஆதீனத்தில் நடைபெறும் ஆவணிமூல விழாவினை நான் முதன்முதலாக அன்று கண்டின்புற்றேன். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய பொன்மொழிகளை முதன் முதலாக நேரில் கேட்கும் வாய்ப்புப் பெற்றேன். கேட்கும் தோறும் மெய்யுணர்வுபெறும் வாய்ப்பு அன்று எனக்குக் கிடைத்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன் நான்கைந்து முறைகள் அவர்கள் பொன்னடிகளைத் தொழுதேன். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கரத்தால் என் நெற்றியில் திருநீறுபூசும் பெரும்பேறு பெற்றேன். ஒவ்வொரு முறையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எதிரில் வணங்குங்காலை மெய்ம்மறந்து "யான் எனது என்னும் செருக் கறுப்பான் - வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்ற திருக்குறளுக்கு இலக்காக ஆகிவிடுகிறது என் உள்ளம்.

நான் போனால் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முன் போகலாம்; அல்லது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முன் நான் போனேன் ஆனால், நான் இல்லை. இத்தகைய உரை யாடியவர் என்போன்றோர் பலர். அதன் பொருள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் முன்னின்று தொழுவார்க்கு "நான்" என்பது அகன்றுவிடுகிறது.

"நான் அகன்றிடில் நான் வாரேன்" என்ற தத்துவத்தைத் திருக்களிற்றுப்படியார் 100 ஆவது வெண்பாவில் "மண்ணிடை நான் வாராமற் - றந்தவனை" என்று மீண்டும் பிறவாதநிலை தந்தவனை எங்கனம் வாழ்த்த இயலும்! என வினவுகிறார். அதேபோல் 'நான் அகன்று நான்வாராமற் - றந்தவனை" என்போன்ற அடியார்கள் குருநாதர் அவர்களைக் காணும் நிலையில் உணர்தலாகும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், என்போன்ற தமிழைச் செவ்வனே கல்லாத நகையுடையோர்க்கும் தெற்றென விளங்கும் தெள்ளுதமிழில் இனிய அருள்மொழிகளைத் திருவாய் மலர்ந்தருளி விளக்கம் தந்தருளினார்கள். ‘கற்றதனால் ஆய பயன் - வாலறிவன் நற்றாள் தொழால்’ என்று திருவள்ளுவர் சுருங்கச்சொல்லிய வகையான் கற்றதின் பயன் கடவுளை வணங்குதல் என்றுமட்டும் சுருக்கமாகப் பொருள் கொள்ளப் படுதலல்லது, கடவுளை வணங்குவதற்கு இன்றியமையாத ஒழுக்கங்களையும் திருவள்ளுவர் விவரித்துள்ளார். ஆனால் அவை இக்குறளின் அடியாகச் சேர்த்து உரை வழங்கியதை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம் முதல்முதலாகச் செவிமடுத்தேன். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மதுரையில் ஓர் கல்லூரிக்கு எழுந்தருளியகாலை அக்கல்லூரியி லுள்ள மாணவர்கள் நடந்துகொண்ட ஒழுங்குமுறையை விளக்க “கற்றதனாலாய பயன் என்கொல்” என்று எடுத்துக்காட்டி அதன் பயன் ஒழுக்கம் என்பதாக “Education is the cult of discipline” என்ற கருத்தை விளக்கினார்கள்.

இந்நாளில் விநோபாபாவே வேண்டப்படும் “ஸ்ரமதான்,” அன்றே ஆண்டவன் மக்களுக்காக மண்ணிடை மண்சுமந்து உழைப்புத்தானம் செய்த படலத்தில் விளக்கிக் காட்டப்பட் டுள்ளது என்றும் மக்கள் கடமையைச் சிவபிரான் தானே வந்து எடுத்துக்காட்டியது சைவ சமயத்திற்கே பெருஞ்சிறப்பு என்றும், அதற்காகக் கொண்டாடப்படும் ஆவணிமூலத் திருநாளிலே ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருமொழிகள் இந்நாட்டில் பல திருநாவுக்கரசர்களைத் தோற்று வித்து விடும் என்றே நம்புகிறேன்.

“இறை” என்னும் சொல்லுக்குத் திருவள்ளுவர் தந்த பொருளை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய விளக்கம் எங்கள் அறிவில்லத்தில் விளக்கேற்றி வைத்தது. அரசன் குடிமக்களுடைய நன்மை தீமைகளில் பங்குகொண்டு முறைசெய்து கோல்கோடாது காப்பவன். அவன் ஆண்டவனுக்கு ஒப்பானவன். ஆகையினால்தான் அவன் “இறை” எனப்படுவான். ஏனைய ஆட்சியாளர்களை வெறும் இறையாகத்தான் கருதவேண்டும் என்ற ஆழ்ந்த கருத்துக்கள்

புதைந்த போன்மொழிகளை வழங்கியருளினார்கள். உழைப்பின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டியவன்; உலகெலாம் உணர்ந்து ஒதற்குரியவன். அவன் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம். தன்பால் வந்தடைந்தார்க்கு அன்பு காட்டி ஆணவம் களையும் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரம்ணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய் சுவாமிகள் அவர்கள் போன் அடிகள் போற்றி !

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

I am very much impressed with the way the temple is maintained and the due curiteousness of the staff and Archakas here. I commend the administration in charge of this temple for their upkeep and discipline. This is a surprise visit of mine and I wish all the temples in this district is maintained to this standard.

(Sd.) T. S. Ranganatha Rao,
Executive Engineer P. W. D. Tanjore
20—7—61

இன்று மாலை ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோயிலைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நமது கோயில்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக விளங்குகிறது. இறைவனை முறையாகவும் சௌகர்யமாகவும் பிரார்த்தனை செய்வித்தார்கள். கோயில் காரியங்களில் ஈடுபட்டுள்ள அனைவருடைய சிரத்தையும் பாராட்டுக்குரியது.

(ஓ-ம்.) நா. மகாலிங்கம், எம். எல். ஏ.
பொள்ளாச்சி.
14—8—61.

செய்திகள்

தருமையாதீனம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு இரண்டாவது கோடி அர்ச்சனை

தருமையாதீனத்தில் திருக்கோயில்கொண்டு அருள்வழங்கும் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு உலக க்ஷேமார்த்தம் இரண்டாவது கோடி அர்ச்சனை தொடங்கி நடைபெறுகிறது. இதுவரை சுமார் அறுபத்தாறு லக்ஷங்களுக்குமேல் நடைபெற்றுள்ளன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்கள் பலரும் பங்கு பற்றும் வண்ணம் குறைந்த செலவில் அர்ச்சனைகள் செய்வதற்கு ஏற்ப வசதிகள் செய்தருளியிருக்கின்றார்கள்.

தருமையாதீனத்தில் ஆவணிமூல விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் ஆலவாய்ச் சோமசுந்தரக்கடவுள் பிட்டுக்கு மண்சுமந்த திருநாளாகிய ஆவணிமூலத் திருநாள் வழிபாடு சிறப்புற நிகழ்ந்தது. பத்து நாட்களும் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. 22—8—61 செவ்வாய்க்கிழமையன்று ஆவணிமூலத் திருநாள். அன்று பகல் 10 மணி அளவில் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. பெருமக்கள் பலர் வழிபாட்டிற்கு வந்து வழிபட்டனர். ஆவணிமூல விழா மலராக ‘‘ திருக்களிற்றுப்படியார் ’’ என்ற சாத்திர நூல் வெளியிடப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்குத் திருநீற்றுப் பிரசாதமும், விழா மலரும் அளித்தருளினார்கள். வழிபாட்டுக்குப் பின்னர் மாகேசுவரபூஜையும் சிறப்புற நடைபெற்றது.

தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா

தருமையாதீனத்தில் ஆவணிமூலத் திருநாள் ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்

பேற்று வருகின்றது. அத்திருநாள் இவ்வாண்டு மூவர் திருநாளாகக் கோண்டாடப்பேற்றது. தென்னுட்டை முப்பெரும் வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் சேவ்வனே பண்டு தோட்டுச் சீரும் சிறப்பும் உற ஆண்டுவந்துள்ளனர் அத்தகைய முப்பெரும் வேந்தர்களின் நினைவாக ஆவணிமூலத் திருநாள் கோண்டாடப்பட்டது மகிழ்தற்குரிய ஒன்ருகும். இத்திருநாள் ஆகஸ்டு 20, 21, 22 ஆகிய நாட்களில் நடைபேற்றது.

ஆகஸ்டு 20 ஆம் நாள் மாலை 5 மணிக்கு முதல் திருநாளாகிய ''சேரர் திருநாள்'' வேதசிவாகமபாடசாலை, ஸ்ரீகுருஞான சம்பந்தர் தோடக்கப்பள்ளி இவ்விருபள்ளிகளின் ஆண்டுவிழா வாகக்கோண்டாடப்பேற்றது. அவ்வமயம் ''சேரர்காலச்சமயம்'' என்னும் போருள்பற்றி திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சோற்போழிவாற்றினுர்கள். தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர் சேஞ்சோற்கோண்டல் வித்துவான் திரு. சோ. சிங்காரவேலன் B. A, அவர்கள் '' சேரர்கால இலக்கியத்தைச் '' சேவ்வனே விளக்கினுர்கள். ''சேரர்கால அரசியல்'' என்னும் போருள்பற்றித் தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திருமதி. ப. வசந்தா அவர்கள் சிறந்த சோற்போழிவாற்றினுர்கள். ஆதீனக் கல்வி நிலைய மாணவர்களின் கலை நிகழ்ச்சியோடு சேரர் திருநாள் முடிவுற்றது.

ஆகஸ்டு 21 ஆம் நாள் மாலை 5 மணிக்கு இரண்டாம் திருநாளாகிய '' சோழர் திருநாள் '' தேவாரபாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி ஆகிய இருபள்ளிகளின் ஆண்டு விழாவாகக் கோண்டாடப்பேற்றது. அவ்வமயம் தேசீய உயர் நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. M. K. நடராஜ அய்யர் M. A., L. T., அவர்கள் சிறப்புச் சோற்போழிவாற்றினுர்கள். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திருமதி. ப. நீலா அவர்கள் '' சோழர்கால இலக்கியம் '' என்ற போருளில் சோற்போழிவாற்றினுர்கள். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. ப. கிருஷ்ணய்யர் B. A., L. T., அவர்கள் '' சோழர்கால அரசியல் '' என்ற தலைப்பில் சோற்போழிவாற்றினுர்கள். ஆதீனக் கல்வி நிலைய மாணவர்களின் கலைநிகழ்ச்சியோடு சோழர் திருநாள் இனிது முடிவுற்றது.

ஆகஸ்டு 22 ஆம் நாள் காலை 11 மணியளவில் மூன்றும் திருநாளாகிய "பாண்டியர் திருநாள்" ஆதீனப் பல்கலைக் கல்லூரியின் ஆண்டு விழாவாக நடைபெற்றது.

தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருநெல்வேலி ம. தி. தா. இந்துக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், இராவ்சாகிப், வித்துவான், திரு. கு. அருணசலக் கவுண்டர் அவர்களுக்குப் "பைந்தமிழ்ச்சேம்மல்" என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடைபோர்த்து ஆசியருளினார்கள். மேலும், ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்பள்ளித்தமிழாசிரியர், வித்வான் திருமதி.ப.வசந்தா அவர்களுக்குத் "தொண்டர் திலகம்" என்ற பட்டத்தையும், வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் ஓதுவார், திரு. க. சோக்கலிங்கம் அவர்கட்குத் "திருமுறை இன்னிசை வாணர்" என்ற பட்டத்தையும் அளித்தருளினார்கள்.

தருமைத் தமிழ்க் கல்லூரியில் பயின்று வித்துவான் தேர்வில் முதல்வராகத் தேர்ந்து திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நிறுவிய ஐந்தாம் ஜார்ஜ் நினைவுப் பரிசாகிய ஆயிரம் வெண் பொற்காசுகளைப் பரிசாகப்பெற்றதைப் பாராட்டி தருமை ஆதீனத் தமிழ்க் கல்லூரி முதல்வர், செஞ்சோற்கோண்டல், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலன் B A., அவர்கட்கும் ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான் திருமதி. ப. நீலா அவர்கட்கும் பாராட்டுப் போற்பதக்கங்களை வழங்கி ஆசியருளினார்கள். பைந்தமிழ்ச் செம்மல், இராவ்சாகிப், வித்துவான், திரு. கு. அருணசலக் கவுண்டர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராம லிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "பாண்டியர்காலச் சமயம்" என்பதுபற்றியும், மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திரு. காந்திநாதன் M. A., அவர்கள் "பாண்டியர்கால இலக்கியம்" பற்றியும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "பாண்டியர்கால அரசியல்" பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். ஆதீனக் கல்வி நிலைய மாணவர்களின் கலை நிகழ்ச்சியோடு மூன்றும் திருநாள் இனிது முடிவுற்றது.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில்
திரு. வி. க. நினைவுநாள் விழா

ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தில் 31—8—61 அன்று 'திரு. வி. க நினைவுநாள்விழா' மாயூரம் முத்தமிழ்மன்ற உரிமையாளர், துரை. திரு. சீனிவாசகம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அதுபோழ்து மாணவர்களில் சோ. இராசமாணிக்கம், சீ. சோக்கலிங்கம், செயலாளர், ஜெ. தியாகராசன், கிருட்டிணமூர்த்தி ஆகியோர் முறையே "திரு. வி. க. உயர் பெருங் கவிஞர்" 'சீர்திருத்தச் சிற்பி' 'நாட்டுத் தொண்டர்' 'சமயக் காவலர்' என்ற தலைப்புக்களில் தெள்ளுதமிழில் பேசினர். கல்லூரி முதல்வர் திரு. சோ. சிங்காரவேலனூர் அவர்கள் வரவேற்புரையும், கல்லூரிப் பேராசிரியர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் நன்றியுரையும் நவின்றூர்கள். அவ்வமயம் திரு. வி. க. வழிநிற்கும் பேராசிரியர், டாக்டர், திரு. மு. வரதராசனூர் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தலைவராகியது குறித்து பாராட்டுத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பெற்றது.

பல்கலைக் கல்லூரியின் மாணவர் கழகத்தில்
குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருள்மொழி

ஸ்ரீகுருஞானசம்பந்தர்கழகத்தில் 1—9—61 அன்று ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் சிறப்புச் சொற்பொழி வாற்றினூர்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மாணவர்கள் கேட்ட பல வினுக்களுக்கும் எளிய இனிய நடையில் விடையிறுத்தார்கள். மாணவர்கள் அருள்நெறியில் நின்று ஒழுக வேண்டும் என்றும், கோயில்களில் திருமறை வழிபாட்டிற்கு தமிழக அரசு இசைவு தந்திருப்பது தமிழர் வரலாறு காணும் புதிய திருப்பமாகுமென்றும், தமிழ் இனம் மொழிப்பற்று மிகுந்து ஒற்றுமையுடன் செயலாற்றவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். கல்லூரிமுதல்வர், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலன் B. A., அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றூர்கள். இறை வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.

தருமையில் ஆரம்ப ஆசிரியர் சங்கக் கூட்டம்

கல்வி இயக்குநரின் ஆணைக்கிணங்க ஊர்தோறும் நடைபெற்று வருகின்ற ஆசிரியர் சங்கக் கூட்டம் ஸ்ரீ குருஞான

சம்பந்தர் துவக்கப்பள்ளியில் 2—9—61 சனிக்கிழமை அன்று கூடியது. கலைக் காட்சிச்சாலை ஒன்று நேர்த்தியாக அமைக்கப் பட்டிருந்தது. கலைக் காட்சியை அனைவரும் பார்வையிட்டபின் கோடியேற்றம் நடைபெற்றது. பிறகு ஆசிரியர் சங்கக்கூட்டம் காலை 10 மணி அளவில் கூடியது. அதற்கு திரு. ம. சீனிவாசன் அவர்கள் தலைமை வகித்தார்கள். செயலரும், பொருளாளரும் அறிக்கை வாசித்தனர். செயலர் திரு. பழனியப்பன் அவர்கள் தமது உரையில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் உறவு கொள் வதற்காகத்தான் நமது கல்வித்துறை இயக்குனர் மாதந்தோறும் முதல் சனிக்கிழமை காலையில் பள்ளி அலுவல் கூட்டமும், மாலையில் பெற்றோர் சங்கக் கூட்டமும் நிகழ ஏற்பாடு செய்திருக் கின்றார் என்று கூட்டத்தின் நோக்கத்தை விளக்கினார்கள். முற்பகல் 12-30 மணி அளவில் கூட்டம் முடிந்தது. மாலையில் நிகழ்ந்த பெற்றோர் சங்கக் கூட்டத்திற்கு மாயூரம் உயர்திரு. V. இராமநாதய்யர் அவர்கள் தலைமை ஏற்றார்கள். வித்துவான் திருமதி ப. நீலா (ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர்) "காவியத்தில் கம்பன்" என்பது பற்றியும், முத்தமிழ் மன்ற உரிமையாளர் திரு. துரை. சீனிவாசமுவரையர் அவர்கள் 'கூட்டுறவு" என்பதுபற்றியும் சொற்பொழிவு ஆற்றி னார்கள். கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றபின் நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் மதிய உணவும், மாலைச் சிற்றுண்டியும் சிறந்த முறையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாணையின்வண்ணம் அளிக்கப் பெற்றன.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தில்

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 12—8—61 நண்பகலில் நடுநாட்டுத் தலங்களாகிய திருவாண்டார்கோயில் என வழங்கும் திருவடுகூரிலும், மாலை யில் திருமாணிகுழி, திருப்பாதிரிப்புலியூர்களிலும் சிறப்பாகநடை பெற்றது. 13-8-61 காலை கரையேறவிட்டகுப்பம், தியாகவல்லி

என வழங்கும் திருச்சோபுரம், தீர்த்தனகிரி என வழங்கும் திருத்தினைநகர் ஆகிய நடுநாட்டுத் தலங்களில் வழிபாடும் சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. புதுவைப் பெருமக்களாகிய ஆடைவணிகர் திரு. சேனாபதி முதலியார், திரு. குப்புசாமி முதலியார், டிப்டி மேயர் திரு, சேதுராமச் செட்டியார், தேசிகம் பிள்ளை, முதலியோர் விழுப்புரத்திலேயே குழுவினரை எதிர் கொண்டழைத்துச் சென்றனர். திருவடுகூரில் கோயில் அறங் காவலர் இராமகிருஷ்ண ரேட்டியார், ஊர்ப்பெருமக்கள், பொது மக்கள் சிவாசாரியார் ஆகியோர் பூர்ணகும்ப மரியாதையுடன் குழுவினரை வரவேற்றனர். உடனிருந்து வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். வழிபாட்டின் பின்னர் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரம் நடை பெற்றது.

புதுவை டிப்டி மேயர் திரு, சேதுராமச் செட்டியார் பேசுகையில் சமயாசாரியர்களால் பாடல்பெற்ற கோயில்கட்குத் தனிச்சிறப்பு உண்டென்றும், பொருளாதாரத்துறையில் நமக் குள்ள சொத்துக்களை நேரில்போய்ப் பார்த்தால்தான் அவற்றி லுள்ள குறை நிறைகள் தெரிவதுபோல அருளாதாரத்துறையில் நமக்குள்ள சொத்துக்களாகிய திருக்கோயில்களை நேரில்போய்ப் பார்த்து வழிபடுவதுதான் குறை நிறைகள் தெரிவதற்கு வாய்ப் பாகுமென்றும், வயிற்றை வளர்க்கும் அரசியலால் நாம் முழு நலம் அடையமுடியாது. வயிற்றுக்குமேல் உள்ள இருதயத்தை யும், புத்தியையும் வளர்க்கும் அரசியலால்தான் முழுநலம் பெறமுடியும் என்றும், அத்தகைய சேர சோழ பாண்டிய பல்லவர் ஆட்சியில் மலர்ந்தனவே நமது நாட்டில் உள்ள கோயில்கள் என்றும், அவற்றுள் இக்கோயில் சோழரும், பல்லவரும் பணிசெய்த பெருமையுற்றது என்றும் இக்கோயில் பழுதடைந்திருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது என்றும், ஊரவரும் நாட்டவரும் விரைவில் திருப்பணி செய்து நமது பழம்பெருமையையும், பண்பையும் பாதுகாக்கவேண்டும் என்றும் கூறினர்கள். சிவபெருமானின் குமாரர்கள் விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், வீரபத்திரர் என நால்வராவர் என்றும், அவர்களுள் பைரவர் வடுகர் எனவும் வழங்கப்படுவார் என்றும், பைரவர் பூசித்தமையால் வடுகூர் என இவ்வூர்வழங்கப்பெறுகிற தென்றும், இத்தலத்திறைவன் பசி, காமம், கவலை, பிணி என்பவை இல்லாதவர் என்று ஞானசம்பந்தர் பாடியிருப்பதால்

அவ்விறைவனைத் தொழுகிறவர்களும் அவற்றிற்கு ஆளாகாமல் வாழலாம் என்றும் சுவாமிகள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். புதுவை ஆடைவணிகர் திரு. V. K. பழனிசாமி முதலியார் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார். ஊர்ப் பொதுமக்கள் பலரும் வழிபாட்டிலும், பிரசாதத்திலும் கலந்து பயனடைந்தனர். பிறகு குழுவினர் பாண்டிச்சேரி சென்றனர் திரு. சேனபதி முதலியாரவர்களும், திரு. குப்புசாமி முதலியாரவர்களும் குழுவினருக்கு மாகேசுவரபூசை செய்து உபசரித்தனர்.

அன்று மாலை திருமாணிகுழிக்குக் குழுவினர் சென்றனர், கடலூர் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களும், ஊர்ப் பொதுமக்களும், சிவாசாரியரும் பூரணகும்பத்துடன் குழு வினரை வரவேற்றனர். குழுவினர் சிவபுராணம் ஓதிக்கொண்டே திருக்கோயிலை வலம்வந்து ஒவ்வொரு சந்நிதியிலும் முறையாக வழிபட்டனர். பிறகு ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமி கள், மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் யாசித்த திருமால் மாணியாக-பிரமசாரியாக இருந்து இங்குப் பூஜித்தமை யால் மாணிகுழி என்று இத்தலம் பெயர்பெற்றது என்றும் சோழர்கட்குத் தில்லைக்கூத்தன் குலதெய்வம் என்பதையும், மூன்றாங் குலோத்துங்கன் தில்லையில் முடிசூடினான் என்பதையும் இவ்வூர்க் கல்வெட்டு அறிவிக்கின்றது என்றும், இத்தகைய சிறப்புவாய்ந்த இத்தலத்திறைவனை மக்கள் வழிபட்டு மாண்புற வேண்டுமென்றும் கூறினார்கள். திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித் தார்கள். பிறகு குழுவினர் திருப்பாதிரிப்புலியூருக்குச் சென்றனர். ஆலய நிர்வாக அறங்காவலர், திரு. பொன். கோவிந்தசாமியவர் களும் மற்ற அறங்காவலர்களும், பொதுமக்கள் பலரும் சிவா சாரியர்களும் குழுவினரைப் பூரணகும்பங் கொடுத்து வரவேற் றனர். குழுவினர் சிவபுராணம் ஓதிக்கொண்டே திருக்கோயிலை வலம்வந்து முறையாக வழிபாடாற்றினர். பிறகு அறங்காவலர் களின் வேண்டுகோட்படி நடராஜர் சந்நிதியில் ஸ்ரீமத் சோமசுந் தரத் தம்பிரான் சுவாமிகள் திருமுறைக்கோயிலை நிறுவினார்கள். அதனை மஞ்சத்தில் அலங்காரம் செய்து வழிபட்டு குழுவினரே எழுந்தருளச் செய்துகொண்டு திருமுறைப் பாராயணத்துடன் வலமாக அம்பாள்கோயிலுக்குச்சென்ற காட்சி மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. அருந்தவநாயகியை வழிபட்டு அம்மையின்

சந்நிதிமண்டபத்தில் வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. சுவாமிகள் தமது தலைமையுரையில் சமணர்களால் கல்லில்கட்டி கடலில் இடப்பட்ட திருநாவுக்கரசர் ஐந்தெழுத்துப் பதிகம் ஓதி அக் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய இடம் இப் பாதிரிப்புலியூர் என்றும், சமணர்களின் பிடிப்பிலிருந்து முற்றிலும் விடுபட்டு அவர்களை வெற்றிகொண்டு மகேந்திரவர்மப் பல்லவனையும் நாட்டு மக்களையும் சைவநெறி நிற்கச் செய்ததும், முதலில் சமண சமயம் சார்ந்தபோது தருமசேனர் என்ற சிறப்புப் பெயரோடு வாழ்ந்திருந்ததுமான சிறப்புடையது இத் தலம் என்றும், இங்குத் திருமுறைக்கோயில் அமைத்துத் திருமுறையை வளர்ப்பது மிக்க பொருத்தமென்றும், இக்கோயில் மகாகும்பாபிஷேகம் செய்யப்படவேண்டிய நிலையிலிருப்பதால் அறங்காவலர்களுடன், பெருமக்களும், பொதுமக்களும் ஒத்துழைத்து மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்றும் கோயில் பூசைகள் முட்டுப்பட்டால் ஊருக்கும் நாட்டிற்கும் தீங்கு விளையுமென்றும், கோயில் நல்ல நிலையில் இருந்தால் ஊரும், நாடும் நலமடையும் என்றும் குறிப்பிட்டார்கள்.

திரு. P. R. சுவாமிநாதன் M. A., L. T., அவர்கள் பேசுகையில் பல அடியார்களுடன் ஒன்று சேர்ந்து இரண்டுநாள் வழிபாட்டில் ஈடுபடும்போது குடும்பக்கவலைகள் எல்லாம் மறந்து அமைதியடைகிறோம் என்றும், வழிபாட்டினால் நலம் உண்டு என்பதை அனுபவத்தால் நன்கு உணரலாம் என்றும் நாற்பத்தினான்கு ஆண்டுகளாகியும் கும்பாபிஷேகம் செய்யாதிருப்பது பெருங்குறை என்றும் ஒவ்வொருவரும் ஊக்கங்கொண்டால் எளிதில் இப்பணி நிறைவேறும் என்றும் குறிப்பிட்டார்கள். கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் அவ்வூர்த் தேவாரச் சிறப்பினைக் குறிப்பிட்டார்கள். புலவர், திரு. N. R. முருகவேள் அவர்கள் பாடலிபுத்திரம் என்பது இத்திருப்பாதிரிப் புலியூரே என்பதை வரலாற்று மேற்கோள்காட்டி விளக்கினார்கள். அறங்காவலர் திரு. பொன். கோவிந்தசாமி அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறுகையில் கும்பாபிஷேகக் கமிட்டியின் தலைவரையும், துணைத்தலைவரையும் பிரேரணைசெய்தார்கள்.

13—8—61 காலை குழுவினர் அப்பர் சுவாமிகள் கரை யேறிய இடமாகிய கரையேறவிட்டகுப்பத்திற்குச் சென்று தரிசித்

தனர். பிறகு தியாகவல்லி என வழங்கும் திருச்சோபுரத்திற்குச் சேன்றனர். திருக்கோயில் அறங்காவலர் திரு. S. முத்துசாமி கச்சிராயரும், ஊர்ப்பொதுமக்களும், சிவாசாரியரும் பூரண கும்பத்துடன் குழுவினரை வரவேற்றனர். குழுவினர் சிவபுராணம் ஓதித் திருக்கோயிலை வலம் வந்து முறையாக வழிபாடாற்றினர். வழிபாட்டின் பின்னர் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மதுரையாதீனம் ஸ்ரீமத். இராம லிங்க சிவயோகி என்ற தம்பிரான் சுவாமிகள் அவர்களால் புதையுண்டிருந்த இக்கோயில் கண்டுபிடிக்கப்பட்டுக் கடலூரைச் சேர்ந்த தனவணிகர்களைக்கொண்டு திருப்பணி செய்யப்பட்ட காரணத்தால் தம்பிரான் கண்ட தலம் எனவும் இத்தலம் வழங்கு கிறது என்றும், வழிபாட்டின் அவசியம் இதனால் நன்கு விளங்கு கிறது என்றும் குறிப்பிட்டார்கள். திருக்கோயில் அறங்காவலர் திரு. முத்துசாமி கச்சிராயர் குழுவினருக்கு இளநீரும், சிற்றுண்டி யும் அளித்து உபசரித்தார்.

பிறகு குழுவினர் திருத்திணைநகருக்குச் சென்றனர். செல்லும் வழியில் ஓரன்பர் அடியார்கட்கெல்லாம் நீர்மோர், தேனீர் முதலி யன கொடுத்து உபசரித்தார். திரு. T. T. முத்துக்குமாரசாமி நாயுடு M. P., திரு. T. T. கோவிந்தராஜலு நாயுடு, T. M. நடேச பிள்ளை, ஊர்ப்பொதுமக்கள், சிவாசாரியர் ஆகியோர் திருக் கோயில் முகப்பில் குழுவினரைப் பூரணகும்பத்துடன் வரவேற் றனர். குழுவினர் திருக்கோயிலை வலம் வந்து முறையாக வழிபட்டனர். வழிபாட்டின் பின்னர் குழுவினருக்கு திரு. T. M. நடேசப் பிள்ளை அவர்கள் இல்லத்தில் மாகேசுவரபூஜை நடை பெற்றது. அதன்பின்னர் திருக்கோயில் அம்பாள் சந்நிதி மண்ட பத்தில் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

திரு. K. கமலக்கண்ணன் M. L. C., அவர்கள் பேசுகையில் அரசியல் துறையில் இருக்கின்ற என்போன்றவர்கட்கு சமயத் தைப்பற்றி அதிகம் தெரியாவிட்டாலும் இச்சூழ்நிலையில் இரண்டு நாட்களாக இருப்பது ஒரு அமைதியையும் இன்பத்தையும் அளிக் கிறதென்றும், இவ்வாறு என்னைப்போன்றவர்களையும் அவ்வப் போது சமயத்துறையில் வழிப்படுத்துகின்ற தருமையாதீனத் திற்கும், சமயப் பிரசார நிலையத்திற்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்றும் குறிப்பிட்டார்கள்.

திரு. N. T. கிருஷ்ணசாமி M. A., B. T., திரு. P. R. சுவாமிநாதன் M. A, L. T., திரு N. R. முருகவேள் M. A., M. O. L., ஆகியோர் அத்தலத் தேவாரம் பற்றியும், சமய வளர்ச்சியின் அவசியம் பற்றியும், யாத்திரையின் பயன்பற்றியும் பேசினுர்கள். சுவாமிகள் தமது தலைமையுரையில் பெரியான் என்ற தொண்டருக்காக இத்தலத்தில் இறைவன் தொண்டராக வந்து தினை விளைவித்தார் என்றும், அதனுல் இத்தலம் திருத் தினைநகர் எனப் பெயர்பெற்றது என்றும், இதனுல் தொண்டுதான் மனித குலத்தை உயர்த்தவல்லது என்பது புலனுகிறது என்றும், நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் இத்தலத்திற்கு எழுந்தருளிப் பதிகம் பாடியுள்ளனர் என்பது சேக்கிழார் பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றும், ஆனுல் அவ்விருவரது பதிகங்களும் மறைந்திருக்கலாம் என்றும், சுந்தரர் பதிகம் நமது உள்ளத்தை உருக்கும் திறம் வாய்ந்தது என்றும் குறிப்பிட்டார்கள். திரு. தி. கி. நாராயணசாமிநாயுடு அவர்கள் அனைவரையும்வரவேற்றுப் பேசுகையில் பாடல்பெற்ற கோயில்களின் சிறப்பையும், வைப்புத் தலங்களின் பெருமையையும் விளக்கினுர்கள். திரு. ச. சிவகுமாரன் அவர்கள் அவ்வத்தலங்களிலும் குழுவினரை வரவேற்று உணவளித்து உபசரித்து உடனிருந்து வழிபாட்டை யும், சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திக்கொடுத்த அறங்காவலர், சிவாசாரியர், ஊர்ப்பொதுமக்கள் ஆகியோருக் கும், திருவதிகை திரு. ந. சண்முகசுந்தரம், கள்ளக்குறிச்சி திரு. பெரியதம்பிப் பிள்ளை, கடலூர் திரு. நாராயணசாமி நாயுடு ஆகியோர் இவ்வழிபாட்டுக்கூட்டம் சிறப்பாக நடக்க உறுதுணை யாக இருந்தமைக்கும், இத்தலங்களில் பதிகங்களை வழக்கம் போல் அச்சிட்டு பக்தர்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய சென்னை மேயர் கம்பெனி திரு. R. மாசிலாமணி முதலியார் அவர்கட்கும் நன்றி தெரிவித்தார். முடிவில் திரு. T. T. முத்துக் குமாரசாமி நாயுடு அவர்கள் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள்.

ஒவ்வொரு தலத்திலும் வழிபாடு நிகழ்த்தும்போது அவ்வத் தலங்களின் தேவாரப் பதிகங்களையும் சுவாமி சந்நிதானத்தில் நிலையத் திருமுறை ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் உளம் உருக ஓதி வழிபாட்டைச் சிறப்பித்தார்கள்.

எதிர்காலம் ☞ கே. முத்துஜோதிடர்

(பிலவஸு புரட்டாசிமீ 1௳ முதல் 30௳ முடிய)

(17—9—61 முதல் 16—10—61 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நான்கு பாதங்களும் மிச்ரபலனைத் தரும். சோக ரோகங்கள் அடிக்கடி காட்டும். மனம் பீதிஅடையச்செய்யும். பரணி நான்கு பாதங்களும் சஞ்சாரபலனைத் தரும். தொல்லை கள் அதிகமாகும். கார்த்திகை முதல் பாதம் ரோகத்தைக் கொடுக்கும். வரவுக்கு மிஞ்சின செலவு காட்டும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீர்ஷம் ½.

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் காரிய விக்னத்தைத் தரும். நிர்ப்பந்தமான காரியங்களில் மாட்டிவைக்கும். எதிலும் நஷ்டம் உண்டுபண்ணும். ரோகிணி நான்கு பாதங்களும், மிருகசீரிஷம் 1, 2 பாதங்களும் நினைத்தபடி ஒன்றும் நடவாது. வீண் அலைச்சல்களும், வீண் விரயங்களும் உண்டாகும். ரொம்ப ஆப்த நண்பர்களும் விரோதமாவார்கள். குடும்பம் கலகம் காட்டும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீர்ஷம் ½, திருவாதிரை புனர்பூசம் ¾.

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும், திருவாதிரை நான்கு பாதங் களும் சுபத்தைத் தரும். வியாதி சாந்தியாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் வியவகார ஜெயத்தைத் தரும். ஆனாலும் எதிர்பாராத நஷ்டங்களும், அதிகச் செலவினங்களும் ஏற்படச் செய்யும். நல்லோர் பெரியோர்களிடமிருந்து நன்மை கிடைப்பது அரிதாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம் ஆயில்யம்.

புனர்பூசம் நான்காம் பாதம் வித்தியாவிருத்தியைத் தரும். கீர்த்திபத்திரம் கிடைக்கச்செய்யும். ஆரோக்கியம் உண்டாகும்.

பூசம் நான்கு பாதங்களும் ஆயில்யம் நான்கு பாதங்களும் நூதனத் தொழில் அபிவிருத்தியைத் தரும். வம்சவிருத்தியாகும். ராஜாங்கத்தால் பூர்ண அனுகூலம் உண்டாகும். நஷ்டமான பொருள்கள் தானாகவந்து சேரும். மனம் சந்தோஷம் அடையும். சனி, செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் சுபமேயாகும். தொல்லைகள் விலகும். அருள் கிட்டும். தொழில் பயிற்சி ஏற்படும். நண்பர்களால் உதவி கிட்டும். உத்தியோக லாபம் எதிர்பாராத அளவுக்கு ஏற்படச்செய்யும். மேலோர். பெரியோர் அன்பு கிட்டும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் ஜெயத்தைத் தரும். எங்கும் பிரசித்தம் ஏற்படச்செய்யும். நினைத்ததெல்லாம் கைகூடும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். தொழில் மேன்மையும், உத்தியோக லாபமும் கிட்டும். தெய்வபலம் முன்னிற்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் விசேஷ நன்மைகளை உண்டு பண்ணும். உலகில் சாதிக்கமுடியாததெல்லாம் சுலபசாத்தியமாகும். தெய்வபலம் ஓங்கும். தீராத நோய் விலகும். எதிர்பாராதபடி தனலாபங்கள் தானாக வந்துசேரும். கிரய விக்கிரய லாபங்கள் விசேஷமாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் தானாக வந்துசேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை

விசாகம் நான்காம் பாதம் சுபமிராது கடன் தொல்லைகளையும் ரோகத்தையும் தரும். அனுஷம் நான்கு பாதங்களும் மிச்ரபலனைத் தரும். அதிக அலைச்சலும், அதிக் செலவினங்களும் உண்டுபண்ணும். தொல்லைகள் அதிகமாகும். கேட்டை

நான்கு பாதங்கள் ஆரோக்கியத்தைத் தரும். ஆடை ஆபரணங்கள் சேரும். இடம் மாறும். குடும்ப சுகம் ஏற்படும். மனம் சந்தோஷம் அடையச்செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுகதுக்கங்கள் சமானமாகும். ஆரோக்கியம் உண்டாகும். உத்தியோக உயர்வும், இல்லற சுகமும் உண்டுபண்ணும். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் விசேஷ யோகத்தையும், அதிகார கௌரவங்களையும் உண்டுபண்ணும். உத்தியோகத்தில் மேல் பதவிகளைத் தந்து இடம் மாறச்செய்யும். ஆரோக்கியம் உண்டு பண்ணும். உலகில் நன்மதிப்பைத் தரும். ஆடை ஆபரணச் சேர்க்கையும், சுகவாழ்வும் ஏற்படும். சனி, செவ்வாய் சுபமாகும்.

11 கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் சுபசோபனுதிகளைத் தரும்; தூரப் பிரயாணம் உண்டுபண்ணும்; நூதன வஸ்திராபரணச் சேர்க்கைகளையும், இல்லற சுகத்தையும் தரும்; தொழில் ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி நான்காம் பாதம் சுபமிராது; வீண் அலைச்சல்களும், தொழில் கவலைகளும், உண்டுபண்ணும். நினைத்த காரியங்கள் தடைபடும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் ரேவதி நான்கு பாதங்களும், விசேஷ சுகத்தையும் சுபத்தையும் தரும், கடன் நீங்கும், கிரய விக்ரயங்கள் ஏற்படச் செய்யும், உத்தியோக உயர்வும் மேலோர் அன்பும் கிட்டும். தெய்வபலம் பூர்ணமாய் முன் நிற்கும். குடும்ப சுகம் தரும், புத்திரனுல் சந்தோஷம் உண்டாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு:- ஷிமாதம் பஞ்சபூதங்களின் இயற்கைக் குணங்கள் மாருகி உலகத்தில் நடக்கவேண்டியவைகளை முரண்பாடாக நடக்கச்செய்யும், எங்கும் ஈதிபாதைகள் அதிகமாகும்

காலத்தை வீண் ஆக்காமல் ஒவ்வொரு ஸாதுக்களும் தபோதனர்களும் தன்னுடைய ஆத்ம சக்தியைக்கொண்டு உலக க்ஷேமத்துக்காக ஒவ்வொரு கிராமம், நகரம் பட்டணங்களிலும் தெய்வீகத் தன்மை பிரகாசிக்கும்படியாகவும் தற்காலம் உலகில் ஏற்பட்டு இருக்கும் பலவித மாறுதல்களுக்கு மூலகாரணமாய் உள்ள செயல்களை எல்லாம் தெய்வபலத்தால் நீங்கும்படி செய்தும் ஸஸ்யங்களும், தான்யங்களும் விருத்தியாகி உலக மக்கள் சந்தோஷம் அடைய எங்கும் நிறைந்த இறைவனை பிரார்த்தித்துவர சுபமுண்டாகும்.

EXTRACT FROM THE VISTORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattainathaswami Devasthanam, Sirkali.

I am fortunate to visit this ancient shrine. It is so inspiring and a divine spiritual experience to go round. The temple is well maintained. I was treated with all kindness and those in charge of the administration have spared no pains to make this shrine remind us of the holy bliss.

(Sd.) P. Veeraswami,
Judge, Madras High Court.
3—9—61

பன்னெறி விளக்கம்

பேருநாவலர், சே. செல்வப்ப முதலியார்

திகைப்புக் கிடந்தருஞ் சிந்தித்த லின்மை சேகத்தின் மிசை
மிகைப்புக் கிடந்தருங் கேள்வி யில்லாமை வேறுப்புமிக்க
பகைப்புக் கிடந்தருஞ் சீலமில்லாமையப் பாவையர்க்கு
நகைப்புக் கிடந்தரு நாணமில்லாமை நறுங்குழலே. 89

தூண்டிடச் செய்யு மழுக்கு நெய்த்தீபந் தொலைவில் புகழ்
பூண்டிடச் செய்யும் புவிக்கு ளடக்கம் பொருள் பலவு
மீண்டிடச் செய்யுந் திருமா தருள் சுரக் கிட்டு யிரை
மாண்டிடச் செய்யுங் கடன்றந்து செய்யும் வருத்தகமே. 90

உ

தருமையாதீனம்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவி